215050

செந்தமிழ்

தொகுதி XXXIII May-June 1935

O31m 211, N05C4
N36-38-7
215050

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

## ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

[தொகுதி-௩௩.] தாது௵ வைகாசி௴ [பகுதி-எ.
Vol. XXXIII. *May—June 1936.* No. 7.

MAY 1936 MADRAS

உள்ளுறை.

நியாயப்பிரவேசமணிமேகலை:—பத்திராசிரியர். கஎ௩—அ0
திருவள்ளுவர்காலம்:—ஸ்ரீமத். R. நரஸிம்ஹன் B.A. (Hons.) கஅக—அஅ
பாண்டியர்வரலாறு:-ஸ்ரீமத் T. V. சதாசிவபண்டாரத்தார் கஅகூ-கூஉ
மதுரைத்தமிழ்ச்சங்கநிர்வாகஸபைத்தீர்மானங்கள்:— ககூ௩
மதிப்புரை:— ககூச—கூசு
ஓர் ஐயவினா:—ஸ்ரீமத். ச. சுப்பிரமணியபிள்ளை கூசு
சிராமலைக்கோவை:- (குறிப்புரையுடன்) — ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி - டாக்டர் உ. வே. சாமிநாதையர். 81—88
சூடிக்கொடுத்தநாய்ச்சியார் தோத்திரப்பாமாலை மூலமும் உரையும்:— ஸ்ரீமத். ரெ. அப்புவையங்கார். 33-40
குருகைமான்மியம்:—T. K. இராமாநுஜையங்கார். 329—336
மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் வரவுசெலவுகணக்கு:—

...திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

... ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.
...நாடுகளுக்கு ரூ 4—8—0.

1936.

...HANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVL., and
...NARAYANA IYENGAR at the Tamil Sangam Power Press,
No. 54, New Jail Road, Madura,

215050

உ

# ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமோருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

---

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

| | I. சங்கப்பிரசுரம். | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... | 1 | 8 | 0 |
| 3. | யாப்பணியிலக்கணங்கள் ... ... ... | 0 | 10 | 0 |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... ... | 4 | 0 | 0 |
| *7. | தோத்திரத்திரட்டு ... ... ... | | | |
| *8. | தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம். | 6 | 0 | 0 |
| * | ஷை இரண்டாம்பாகம் ... ... ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் ... ... ... | 5 | 0 | 0 |
| *9. | அபிதானசிந்தாமணி ... ... ... | | | |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 12. | அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ... ... | 0 | 8 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... ... | 0 | 6 | 0 |
| 14. | தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ... | 1 | 4 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ... | 0 | 1 | 0 |

---

உ
கடவுள் துணை.


# செந்தமிழ்.

தொகுதி-நந.] தாதுஹூ வைகாசிமீ [பகுதி-எ.
Vol. XXXIII. May—June 1936. No. 7.


## நியாயப்பிரவேச மணிமேகலை.

[கரு—ஆம் பக்கத் தொடர்ச்சி.]

### 2. சாத்தியதர்மாசித்தம்.

இனி, நியாயப்பிரவேசத்தில் சாத்தியதர்மாசித்தம் என்னும் திருஷ்டாந்தப்போலிநிரூபணம் வருமாறு:—

ஸாத்யதர்மாஸித்தோ யதா? நித்ய: ஶப்தோ(அ)மூர்த்தத்வாத்,
பரமாணுவத்। யதமூர்த்தம் தந்நித்யம் த்ருஷ்டம் யதா பரமாணு:॥
பரமாணௌ ஹி ஸாதநதர்மோ(அ)மூர்த்தத்வமஸ்தி,
ஸாத்யதர்மோ நித்யத்வம் நாஸ்தி; அநித்யத்வாத் பரமாணோரிதி॥

[இதனுள்ளும் பரமாணுவத் என்று இடையே யெழுதப்பட்டிருப்பது மிகைபட்ட பிழையாயிருத்தலால் அதனை ஒழித்துவிட்டு உரைவரையப்படுகிறது.]

இதன்பொருள்:— 'சாத்தியதர்மாசித்தம் எங்ஙனமெனில்? "சத்தம் நித்தியப்பொருள்; அமூர்த்தப்பொருளாதலால்; யாதொன்று அமூர்த்தப்பொருளோ அது நித்தியப்பொருளாகக் காணப்பட்டது; புத்தியெப்படியோ அப்படியே" புத்தியின்கண் சாதநதர்மமான அமூர்த்தத்தன்மையுள்ளது; சாத்தியதர்மமான நித்தியத்தன்மையில்லை; புத்தி அநித்தியமாதலால்' என்பது.

இதனுள் 'புத்தியெப்படியோ அப்படியே' என்றது, 'புத்தி போலும்' என்னும் திருஷ்டாந்த வாசகபரியாயமாய் உதாரணமாயிற்று. அதன்மேலுள்ளன விளக்கவுரை. [இவ்வாறான விளக்கவுரை இந்நூலுள் முறையே வரையப்படவில்லை. ஈண்டு வரையப்பட்டிருப்பது முறைபிறழ்வு.]

மணிமேகலையில் இத்திருட்டாந்தப்போலி சாத்தியதன்மவிகலம் என்ற பெயரால் வழங்கப்படுகிறது. அது வருமாறு:—

(சாத்தியதன்மவிகலம்.)

'சாத்திய தன்ம விகல மாவது
காட்டப் பட்ட திருட்டாந் தத்திற்
சாத்திய தன்மங் குறைவு படுதல்
சத்த நித்த மமூர்த்த மாதலால்,
யாதொன்றி யாதொன் றமூர்த்தமது நித்தம்
புத்தி போலென் றுற்றிருட் டாந்த
மாகக் காட்டப் பட்ட புத்தி
யமூர்த்த மாகி நின்றே யநித்த
மாத லாற்சா தனவமூர்த் தத்துவ
நிரம்பிச் சாத்திய நித்தத்துவங் குறையும்' (௩௫௦-௫௧)

என்பது.

இதனுள், 'சாத்தியதன்மவிகலமாவது' என்றது சாத்தியதன்மவிகலமென்னும் திருட்டாந்தப்போலியின் இலக்கணம் என்றவாறு.

'சாத்தியதன்மவிகலம்' என்னும் இலக்கியத்தின் பெயர் அதன் இலக்கணத்துக்கு ஆனமையால் ஆகுபெயர்.

'ஆவது' என்றது எழுவாய்ப்பொருள்பற்றிய பெயர்ப்பின் வருவதோர் சொல்லுருபு.

'காட்டப்பட்ட திருட்டாந்தத்திற் சாத்தியதன்மங் குறைவு படுதல்' என்றது வாதியால், தன் துணிபொருட்பேற்றுக்கு உதாரணமாகக்காட்டப்பட்ட திருட்டாந்தப்பொருளில் சாத்தியதன்மம் இல்லையாதல் என்றவாறு.

திருட்டாந்தத்திற்பொருந்தியிராமை சாத்தியதன்மத்துக்கும் குறையாதலால் 'திருட்டாந்தத்திற் சாத்தியதன்மங் குறைவு படுதல்' என்றார்.



'சாத்தியதன்மங்குறைவுபடுதல்' என்றதன் குறிப்பால் சாதனதன்மம்நிரம்பியிருத்தல்வேண்டுமென்பது பெறப்பட்டது. பெறவே சாதனதன்மம் நிரம்பிச் சாத்தியதன்மமட்டும் குறைவுபட்டிருக்கும் பொருளைத் திருட்டாந்தங்காட்டுதல் சாதனதன்மவிகலமென்னும் திருட்டாந்தப்போலியின் இலக்கணம் என்றவாறாயிற்று.

[இவ்விலக்கணம் நியாயப்பிரவேசத்தில் இல்லை.]

இனி 'சத்த நித்த மமூர்த்த மாதலால், யாதொன்றி யாதொன் றமூர்த்தமது நித்தம், புத்திபோல்' என்று உதாரணங் காட்டப்படுகிறது.

இதனுள், 'சத்தம்' பக்கப்பொருள்; 'நித்தமாதல்' சாத்திய தன்மம்; 'அமூர்த்தமாதல்' சாதனதன்மம்; 'யாதொன்று யாதொன்று அமூர்த்தம் அது நித்தம்' என்றது வியாத்திவசனம்; 'புத்திபோல்' என்றது திருட்டாந்தவசனம்; இத் திருட்டாந்த வசனத்தாற்சொல்லப்பட்ட புத்தி திருட்டாந்தப்பொருள்.

'என்றால்' என்றது இத்திருட்டாந்தத்திலுள்ள குற்றத்தையெடுத்துக்காட்டி விளக்குதற்கு வாதிகூற்றை அநுவதித்துக் கொண்டமைதோன்றநின்றது.

'திருட்டாந்தமாகக் காட்டப்பட்ட புத்தி அமூர்த்தமாகி நின்றே' என்றது 'சத்தம் அநித்தம்' என்ற மேற்கோளுக்குத் திருஷ்டாந்தப்பொருளாகக்காட்டப்பட்ட புத்தி, சத்தம்போல வடிவில்லாமையால் அமூர்த்தத்தன்மையான சாதனதன்மமுடையதாயிருந்துகொண்டு என்றவாறு; இது சாதனதன்மம் திருட்டாந்தப் பொருளான புத்தியில் நிரம்பியிருத்தல் காட்டியவாறு. சாதன தன்மம் நிரம்புதல் சாதன்மியதிருட்டாந்தத்துக்குக் குணமேயாயினும், அது சாத்தியதன்மம் நிரம்பாமையுடன் கூடினமையால் குற்றமாயிற்று.

'அநித்தமாதலால்' என்றது 'சத்தம் நித்தம்' என்று துணியப்பட்ட சாத்தியதன்மமாகிய நித்தமாதல் (தோற்றக்கேடின்மை) புத்தியின்கண் இன்றியே அதன் மறுதலையான அநித்தமாதல் (தோற்றக்கேடு) காணப்படுதலால் என்றவாறு. புத்திக்குத் தோற்றக்கேடுண்மை நினைப்பு மறப்புண்மையான் அறியக்கடவது.

இதனால் புத்தியாகிய திருட்டாந்தப்பொருளில் சாத்தியதன்மம் (நித்தியத்துவம்) நிரம்பாமை காட்டப்பட்டது.

'சாதனவமூர்த்தத்துவம் நிரம்பி, சாத்திய நித்தத்துவம் குறையும்' என்றது இத்திருட்டாந்தப்போலியிலக்கணத்தை அதன் உதாரணத்தில் பொருத்திக்காட்டியவாறு; அதாவது: திருட்டாந்தமாகக் காட்டப்பட்ட புத்தி அமூர்த்தமாதலால் சாதன தன்மம் நிரம்புதலும், அநித்தியமாதலால் சாத்தியதன்மம் நிரம்பாமையுமாகிய இத்திருட்டாந்தப்போலியிலக்கணமுடைமையால் இது சாத்தியதன்மவிகலமா மென்றபடி.

இது நியாயப்பிரவேசத்தில் 'சாத்தியதர்மாசித்தம்' என்று வழங்கப்பட்டது.

### 3. உபயாசித்தம்.

இனி நியாயப்பிரவேசத்தில் உபயாசித்தம் என்னும் திருஷ்டாந்தப்போலிநிரூபணம் வருமாறு:—

உ஭யாஸிஜோ ஜ்விவிய: ; ஸந்நஸம்ஶ்வதி ।
தத்ர வடவதி விஷயோ நாஸயாஸிஜ: ;
ஈநித்யத்வாநுஸ்தத்வாது வடஸ்ய ॥

இதன்பொருள்:—'உபயாசித்தம்' என்னும் திருஷ்டாந்தப்போலி (1) உள்ளது (2) இல்லது என இரண்டுவகைப்படும்; அவற்றுள், 'குடம்போலும்' என்பது 'உள்ளது' என்னும் பெயருள்ளஉபயாசித்தம்; குடம் அநித்தியமாயும் மூர்த்தமாயும் இருத்தலால்; என்பது.

இதனுள், குடம்போலும் (வடவக) என உண்மையின் உபயாசித்தத்துக்கு உதாரணமாகத் திருஷ்டாந்தவாசகம்மட்டும் சொல்லப் பட்டிருக்கிறது; அதற்கு உறுப்பாக முன்பே சொல்லவேண்டிய பக்ஷ சாத்திய சாத்னதர்மவசனங்களும், அன்னுவய வியாத்திவாசகமும் சொல்லாமலே விடப்பட்டன.

அவை, 'சத்தம் நித்தியப்பொருள்; அமூர்த்தப்பொருளாதலால்; யாது யாது அமூர்த்தப்பொருளோ அதுஅது நித்தியப்பொருள்' என்னும் பொருளுடைய வடமொழிவாக்கியங்களா யிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. இவற்றை யெழுதாதுவிட்டு உய்த்துணரவைத்திருப்பது முறைபிறழ்வும் குன்றக்கூறலுமாம்.

'உபயாசித்தம்' என்று இங்கு வழங்கப்பட்ட திருட்டாந்தப் போலிகளிரண்டும் மணிமேகலையுள் உபயதன்மவிகலம் என்னும் பெயரால் வழங்கப்பெறுகின்றன.



(உபயதன்மவிகலம்.)

மணிமேகலையுள் அவற்றின் இலக்கணம் வருமாறு:—

'உபய தன்ம விகல மாவது
காட்டப் பட்ட திருட்டாந் தத்திலே
சாத்திய சாதன மிரண்டுங் குறைதல்' (நசு0—சுஉ)

என்பது.

இதன் பொருள்: 'உபயதன்மவிகலமென்னும் திருட்டாந்தப் போலியின் இலக்கணமாவது: வாதியால் துணிபொருள் நாட்டக் கருதிக் காட்டப்பட்ட திருட்டாந்தத்திலே, அவனால் சாதிக்கக் கருதும் சாத்தியப்பொருளும், அதனை அவன் நிரூபிக்கக்கருதிக் கூறும் ஏதுப்பொருளும் இரண்டும் இல்லையாதல்' என்பதாம்.

(இவ்விலக்கணம் நியாயப்பிரவேசத்தில் இல்லை.)

இனி, இத்திருட்டாந்தப்போலி இரண்டுவகையாகப் பகுக்கப் படுகிறது. அது வருமாறு:—

'அன்றியு மதுதான் சன்னு மசன்னு
மென்றிரு வகையாம்' (நசுந-சுச)

என்பது.

இதனுள் 'அன்றியும்' என்றது முற்கூறிய இலக்கணத்தோடு இப்பாகுபாடும் தொடர்புடையதென்னும் குறிப்புணரநின்றது.

'அதுதான்' என்றது உபயதன்மவிகலமென்னும் திருட்டாந்தப்போலியென்றவாறு.

'சன்னும் அசன்னும் என்றிருவகையாம்' என்றது திருஷ்டாந்தப்பொருள் உள்ளதாயிருப்பதுபற்றிச் 'சன்னு' எனவும் திருட்டாந்தப்பொருள் இல்லதாயிருப்பதுபற்றி 'அசன்னு' எனவும் இரண்டு வகைப்படும் என்றவாறு.

'என்று' என்னும் இடைச்சொல்லை, 'சன்னு' 'அசன்னு' என்னும் இரண்டுபெயர்ப்பின்னும் கூட்டி, சன்னென்றும் அசன்னென்றும் இருவகையாம் என்க.

திருட்டாந்தப்பொருள் வாதிக்கு உள்ளதாயிருந்தாலும் எதிரிக்கு இல்லதாயிருந்தால் அதுபற்றியே 'அசன்னு' என்று வழங்கப்படும்.

### (1) சன்னு.

இனி, அவ்விருவகை உபயதன்மவிகலத்துள் முன்னதாய் நின்ற 'சன்னு' என்னும் திருட்டாந்தப்போலிநிரூபணம் வருமாறு:-

'............இவற்றுட்சன் னுவுள
உபய தன்ம விகல மாவது
உள்ள பொருட்கட் சாத்திய சாதனங்
கொள்ளு மிரண்டுங் குறையக் காட்டுதல்;
சத்த நித்த மமூர்த்த மாதலான்
யாதொன் றியாதொன் றமூர்த்தமது நித்தங்
கடம்போ லெனிற்றிருட் டாந்த மாகக்
காட்டப் பட்டகடந் தானுண் டாகிச்
சாத்திய மாயுள நித்தத் துவமுஞ்
சாதனமா யுளவமூர்த் தத்துவமுங் குறையும்.'
(௫௬௪-௫௭௫

என்பது.

இதனுள், "இவற்றுள், சன்னுவுள உபயதன்மவிகலமாவது உள்ள பொருட்கட் சாத்திய சாதனங் கொள்ளுமிரண்டுங் குறையக்காட்டுதல்" என்றது இலக்கணம்.

'இவற்றுள்' என்றது 'சன்னு', 'அசன்னு' என்னும் இருவகை 'உபயதன்மவிகலத்துள்' என்றவாறு.

'சன்னுவுள்ள உபயதன்மவிகலம்' என்றது 'சன்னு' என்று சொல்லப்பட்ட உபயதன்மவிகலத்தின் இலக்கணம் என்றவாறு. இலக்கணம் ஒற்றுமைநயம்பற்றி இலக்கியத்தின்பெயரால் வழங்கப்பட்டது.

'உள்ளபொருட்கண்' என்றது எதிரியாலும் உள்ளதென்று கொள்ளப்பட்ட திருட்டாந்தப்பொருளின்கண் என்றவாறு. 'உள்ளபொரு'ளென்று வாளா கூறினமையால் இருவராலுமுள்ளதென்றுகொள்ளப்பட்டபொருள் என்பது பெறப்பட்டது.

'சாத்திய சாதனங் கொள்ளு மிரண்டுங் குறையக் காட்டுதல்' என்றது திருட்டாந்தப்பொருள் தன்னுள் கொண்டிருக்கவேண்டும் சாத்தியதன்மமும், சாதனதன்மமும் என்னும் இரண்டுதன்மங்களும் அதன்கண் இல்லையாயிருக்கச்செய்தே அப்பொருளை உதாரணங்காட்டுதல் என்றவாறு.



'உள்ளபொருட்கண் அதுகொள்ளும் சாத்திய சாதனமிரண்டும்' எனக் கூட்டுக. 'உள்ளபொருட்கட் குறைய' என இயையும். திருட்டாந்தப்பொருளுக்குச் சாத்திய சாதன தன்மங்கள் உறுப்பாதலால் அவ்வுறுப்பில்லையாதல் அதற்குக் குறையாயிற்று.

இதனாற் சொல்லியது, எதிரியால் உண்டென்று கொள்ளப்பட்டதொருபொருளில் சாத்திய சாதன தன்மங்கள் இரண்டும் இல்லனவாயிருக்கச்செய்தே அப்பொருளைத் திருட்டாந்தமாகக் காட்டுதல் 'சன்னு' என்ற பெயருள்ள 'உபயதன்மவிகல'மென்னும் திருட்டாந்தப்போலியின் இலக்கணமாம் என்பதாயிற்று.

[இவ்விலக்கணம் நியாயப்பிரவேசத்தில் இல்லை.]

இனி உதாரணம் காட்டப்படுகிறது,

'சத்தம் நித்தம் அமூர்த்த மாதலான்
யாதொன் றியாதொன் றமூர்த்தமது நித்தம்
கடம் போல்' (௫௬௮—௭௦) என்று.

இது சாதனவாக்கியம். இதனுள், சத்தம் பக்கம்; நித்தம் (நித்தியப்பொருளாதல்) சாத்தியதன்மம்; அமூர்த்தமாதல் (வடிவின்மை) சாதனதன்மம். (இவையும் வியாத்திவாசகமும் நியாயப்பிரவேசத்தில் எழுதப்படாதவை.)

இதன்மேல் சத்தம் அமூர்த்தமாயிருப்பதுகொண்டு அது நித்தப்பொருளெனத் துணிபவன் அமூர்த்தப்பொருளாயிருப்பதெல்லாம் நித்தப்பொருளாயுள்ளன என்றுணர்தற்குரிய சாதன சாத்தியங்களின் வியாத்தி (உடனிகழ்ச்சி)யைக் காட்டவேண்டுமன்றே; அங்ஙனங்காட்டுதற்குரிய வியாத்திவசனங் கூறப்படுகிறது. 'யாதொன்றியாதொன் றமூர்த்தமது நித்தம்' என்று.

இதன்பொருள்:— அமூர்த்தமாயுள்ளனவெல்லாம் நித்தமாம். என்றவாறு.

யாதொன்று யாதொன்று என்னும் வினைப்பெயரடுக்கு எஞ்சாமைப்பொருளுணரநின்று, 'அமூர்த்தம்' என்னும் பெயர்ப்பயனிலைகொண்டதாய்ப் பின்னும் 'நித்தம்' என்னும் பெயர்ப்பயனிலைக்கு எழுவாயாகச் சுட்டப்பட்டது. அச்சுட்டும் வினைவடுக்கால் அது அது என்னும் சுட்டடுக்காய் எஞ்சாமைப்பொருளுணர நின்றது.

இதனால் அமூர்த்தப்பொருளாயுள்ளனவெல்லாம் நித்தப் பொருள் எனக் கூறியவாறாயிற்று.

'கடம்போல்' என்றது திருட்டாந்தவசனம்; அதனாற்சொல்லப் பட்ட 'கடம்' திருட்டாந்தப்பொருள். (இத்துணையும் வாதி கூற்று.)

'எனின்' என்றது இது போலியாமாறு விளக்கிக்காட்டுதற்கு வாதி கூற்றை அநுவதித்துக்கொண்டமைதோன்றநின்றது. அவ்விளக்கம் வருமாறு:—

'........... திருட் டாந்த மாகக்
காட்டப் பட்டகடந் தானுண் டாகிச்
சாத்திய மாயுள நித்தத் துவமும்
சாதனமா யுளவமூர்த் தத்துவமும் குறையும்' (௩௭௦—௭௩)

என்பது. [இதுவும் ந்யாயப்பிரவேசத்தில் இல்லை.]

இதனுள், 'திருட்டாந்தமாகக்காட்டப்பட்ட குடம் தான் உண்டாகி' என்றது 'சத்தம் நித்தம் அமூர்த்தமாதலால்' என்று கூறிய அநுமானத்துக்குக் காட்டப்பட்ட திருட்டாந்தப்பொருள் குடம்; அது தான் உள்ளதாகியிருந்துகொண்டு என்றவாறு.

'சாத்தியமாயுள்ள நித்தியத்துவமும், சாதனமாயுள்ள அமூர்த்தத்துவமும் குறையும்' என்றது, 'சத்தம் நித்தம்' என்று தன் பிரதிஜ்ஞாவாசகத்தாற் சொல்லப்பட்ட தன்னுறுப்பாகிய சாத்தியதன்மமான நித்தியத்துவமும், 'அமூர்த்தமாதலால்' என்று ஏதுவசனத்தாற் சொல்லப்பட்ட தன் உறுப்பாகிய சாதனதன்மமான அமூர்த்தத்துவமும் உடைமைக்குமறுதலையான இன்மையால், குறையுமாதலால் இஃது உபயதன்மவிகலமாயிற்று என்றவாறு.

'கடம், தானுண்டாகி நித்தியத்துவமும் அமூர்த்தத்துவமும் குறையும்' எனச் சினைவினைகொண்டு முடிந்தது; குடமாகிய திருட்டாந்தப்பொருளுக்குச் சாத்தியசாதனதன்மங்கள் உறுப்பாதலான் என்க.

குடம் தான் உண்டாகி என்றது தனக்கு உறுப்பாகிய சாத்திய சாதனதன்மங்கள் (குறைதல்) இல்லையாதல் என்பதுபடநின்றது.

[தொடரும்.]

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

---



# திருவள்ளுவர்காலம்.

[௯௨-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

இனித் திருவள்ளுவர்காலந்தான் என்னை எனிற் கூறுவன்; திருவள்ளுவர்காலத்தை இன்னநூற்றாண்டென்று அறுதியிடுதற்கு ஏற்ற ஆதாரங்கள் நமக்கு இல்லையெனினும், அவரைத் தொல்காப்பியர்க்கும் கடைச்சங்கப்புலவர்களுக்கும் காலத்தால் மிகப் பிந்தியவர் எனக் கொள்ள ஏற்ற ஆதாரங்கள் உள. அவைகள் சுருக்கமாக ஆராயப்படும்.

## 1. தொல்காப்பியத்தினின்றும் பிறழ்தல்.

பண்டைக்காலத்தே அகப்பொருள் எல்லாவகைப்பாக்களிலும் அமைத்துப் பாடப்பட்டதாகத் தெரியவில்லை. புலனெறி வழக்கமாகிய அகப்பொருள், கலிப்பா பரிபாடல் ஆகிய இருவகைச் செய்யுளுக்கேயுரியதென்று தொல்காப்பியரே நியமித்திருக்கிறார். இது,

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட் டாயிரு மருங்கினும்
உரியதாகு மென்மனார் புலவர்"

என்ற சூத்திரத்தால் இனிது விளங்கும். இன்பப்பகுதிபற்றியே பரிபாடல் பாடப்பட்டது என்பதும்தொல்காப்பியர் செய்யுளியலில், "காமங்கண்ணிய நிலைமைத்தாகும்" என்று கூறியதால் விளங்கும். இதனால் தொல்காப்பியர்காலத்திலும் அதற்குப் பிற்காலத்திலும் எல்லாவகைப்பாக்களிலும் அகப்பொருள் வழங்காமை நன்கு அறியப்படும். தொல்காப்பியர்க்கு வெகுகாலத்திற்குப்பின்பே அகப்பொருள் ஆசிரியம், வெண்பா, வஞ்சிப்பாக்களில் அமைக்கப் படலாயிற்று. இவ்விடத்துப் பொருளதிகாரம் 38-ஆம் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் தாம் வாழ்ந்தகாலத்திற்கேற்ப, வேறு உரைத்ததும் நோக்கத்தக்கது.

அகப்பொருளைக் குறள்வெண்பாவில் முதன்முதல் அமைத்தவர் திருவள்ளுவரேயாவர். இது தொல்காப்பியவிதியினின்றும் பிறழ்ந்த வழக்காகும். கடைச்சங்கநூல்களிற் கலித்தொகையும்,

பரிபாடலும் அல்லாத ஏனைய தொகைநூல்களில் ஆசிரியம்வெண்பா வஞ்சிப்பா முதலியவைகளில் அகப்பொருள் கூறப்படுமாயினும், குறள்வெண்பாவில் அகப்பொருளை (—அதாவது காமத்துப்பால் முழுவதையும்) அமைத்து நூலியற்றியவர் திருவள்ளுவரேயாவர். தொல்காப்பியம் ஆக்கப்பட்டதற்கும் அதன் விதிகள் பிறழ்ந்து வழங்கப்பெற்றதற்கும் இடையே பலநூற்றாண்டுகள் சென்றிருக்க வேண்டும். திருவள்ளுவர் தமக்குமுன் வழங்கப்பெறாத புதிய குறள்வெண்பாவிலே தொல்காப்பியவிதிக்கு விரோதமாக அகப்பொருளையும் ஏனையவைகளையும் அமைத்துத் தம்நூலை இயற்றியதால் தொல்காப்பியவிதிகள் மிகக் குறைவாகப் பிறழ்ந்துவழங்கப் பெற்ற கடைச்சங்ககாலத்திற்கும் பிந்தியவராயிருத்தல்வேண்டும் என்று கொள்ளின் இழுக்காகாது.

இதுவுமன்றி, மொழிக்கு முதலாகாது என்று தொல்காப்பியர் விதந்துகூறிய சூத்திரவிதிக்கு மாறாகத் திருவள்ளுவர் சகரமுதற் சொற்களைப் பிறமொழிகளிலுள்ளபடியே உருத்திரிக்காமல் தாம் கூறும் குறள்வெண்பாக்களிலே முதற்சொல்லாக அமைத்திருக்கிறார். ஏனைய கடைச்சங்கப்புலவர்களாயினும், அச்சொற்களைத் தமிழொலியிலக்கணத்திற்கேற்பக் கூடியவரை திரித்துச் செய்யுளின் இடையே பெய்திருக்கின்றனர். இதனானும் திருவள்ளுவர் தொல்காப்பியர்க்கும் கடைச்சங்கப்புலவர்கட்கும் காலத்தாற் பிற்பட்டவர் எனக் கருத இடமிருக்கிறது.

## 2. நூல்வகுப்பு.

திருக்குறள்வகுத்தமுறை பண்டைத் தமிழ்நூல்களினின்றும் பெரிதும் வேறுபடுவது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. ஏனைய சங்கத்தமிழ்நூல்களெல்லாம் அகம் புறம் என்றே பகுக்கப்பட்டுள்ளன. பண்டைப்புலவர்கள் இன்பப்பகுதியை அகத்தும் அறம் பொருள் வீடு மூன்றையும் சேர்த்துப் புறத்தும் பகுத்துவைத்தனர். முதலாவதாக அறம்பொருள்இன்பப்பொருளை, தர்மம் அர்த்தம் காமம் என்ற வடமொழிநூல்வகுப்புமுறைக்கேற்ப வகுத்து நூலியற்றியவர் திருவள்ளுவரேயாவர். இவ்வழியாக நூல்கள் வகுக்கப்படுமாறு தொல்காப்பியத்திலே விதந்துசொல்லப்படவுமில்லை. பொருளதிகாரத்தில் தொல்காப்பியர் இலக்கியத்திற்குரிய பொருளை அகம் புறம் என்றுமட்டுமே வகுத்து அதற்கு விதிகள்



கூறிப் பின் செய்யுள் மரபு மெய்ப்பாடு முதலியவைகளுக்கிலக்கணம் கூறுகிறார்.

திருக்குறளில் மூன்று பெரும்பிரிவுகளாக வகுக்கப்பட்டவைகளையே பின்னும் வகுத்து ஆராயின் அதனுள்ளும் சில வடநூன் முறைவகுப்புக்கள் காணப்படுகின்றன. அரசனுக்கு இருக்க வேண்டிய அங்கங்கள் ஆறையும் திருவள்ளுவர் வடமொழி நீதி நூல்களிற் கண்டவாறே வகுத்துக் கூறுகிறார். சுக்கிரநீதியில் அரசியலுக்கு அரசனையும் ஓரங்கமாகச் சேர்த்து ஏழுஅங்கங்கள் உரியனவாகக் கூறப்பட்டன. அரசனின்றி அரசியல் அக்காலத்தில் இல்லையாதலின் அவைகளை அரசனுக்குரிய அங்கங்களாகவே திருவள்ளுவர் கூறினமையின், அவருக்குப் ‘படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்’ என ஆறாயிற்று. சுக்கிரநீதியிற் சொல்லப்பட்ட நாடும் பொருளும் திருக்குறளிலே ஆகுபெயராய் ‘குடி, கூழ்’ என்ற சொற்களால் வழங்கப்படுகின்றன. இம்முறையில் அரசனின் அங்கங்களைத் திருக்குறளைத்தவிர ஏனைய சங்கப்பனுவல்கள் எதுவும் இவ்வாறு பிரித்து விதந்துகூறவில்லை. இதனால் திருவள்ளுவர் வடமொழிநீதிநூற்கருத்தைத் தழுவி யெழுதியிருத்தல்கூடுமாதலின், அவர் சங்கப்புலவர்களுக்குக் காலத்தாற் பிற்பட்டவர் என்று கொள்ளுதற் கிடமுண்டு. பண்டிதமணி. மு. கதிரேசன் செட்டியாரவர்கள் தாம் வெளியிட்ட சுக்கிரநீதி யென்னும் மொழிபெயர்ப்புநூலிற் குறட்கருத்துக்களை ஆங்காங்கு எடுத்துக்காட்டியுள்ளார்கள். அவையெல்லாம் கற்றோ ராராய்ச்சிக்குரிய. இவையன்றியும், திருக்குறளில், பழந்தமிழர்க்குப் புதியவான சங்கப்பனுவல்களிற் காணப்படாத, வடமொழி நீதிநூற்கருத்துக்கள், வடமொழியிற் கண்ட வரிசைப்படியே காணப்படுகின்றன. வடநூலார் காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் என்று கூறிய அரசனின் பகைவர்க்கங்களையே, திருவள்ளுவரும், செருக்கு சினம் சிறுமை இவறல் மானம் உவகையெனச்—

> “செருக்குஞ் சினமும் சிறுமையு மில்லார்
> பெருக்கம் பெருமித நீர்த்து.” (குறள். 431.)

> “இவறலு மாண்பிறந்த மானமு மாணா
> வுவகையு மேத மிறைக்கு.” (குறள். 432.)

என்ற குறளடிகளாற் கூறுகிறார். இம்முறையில் அரசனுக்குவரும் குற்றங்கள் ஆறென இவரொழிந்த ஏனைய சங்கப்புலவர்கள்

தொகுத்துக்கூறவில்லை. ஆறு பகைவர்க்கங்களும் இம்முறையே தொகுக்கப்பட்டுச் சாணக்கியர் அர்த்தசாஸ்திரத்திற் காணப்படுகின்றன. விரிக்கிற் பெருகுமென்றஞ்சிப் பின்னும் எடுத்துக்காட்டாது விடுகின்றேன்.

## 3. பரிமேலழகர் கருத்து.

திருக்குறளுக்குச் சிறந்த உரைபகர்ந்து அறிய இயலா மறைபொருள்களைத் தெளிவுப்டுத்திய பேருபகாரியாகிய பரிமேலழகர், பலவிடங்களிலும் திருவள்ளுவர் வடநூற்பொருண்மையையுட் கொண்டுரைத்தனரென்று கூறுகிறார். அவற்றுள் ஒன்றை மட்டும் இங்கே சான்றாக எடுத்துக்காட்டுகிறேன்.

"அறம்பொரு ளின்ப முயிரச்ச நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்" (குறள். 501.)

என்ற குறளுரையிற் பரிமேலழகர் உபதைகள் நான்கையும் விளக்கியபின்னர் "இவ் வடநூற்பொருண்மையையுட்கொண்டு இவரோதியதறியாது பிறரெல்லாம் இதனை உயிரேச்சமெனப் பாடந்திரித்துத் தத்த'மக்குத்தோன்றியவாறே யுரைத்தார்" எனக் கூறியுள்ளார். இவ்வுபதைகள் நான்கும் சாணக்கியரது அர்த்தசாஸ்திரம் முதற்பகுதி 10-ஆம் அத்தியாயத்திற் கூறப்பட்டுள்ளன. இக்குறளுக்கு வேறுபாடங்கொள்வாரைக் கண்டித்து அர்த்தசாஸ்திரமாகிய வடநூலையேயுட்கொண்டு திருவள்ளுவர் இக்குறளையுரைத்தனர் என்றமையானே, பரிமேலழகர் வடமொழி நீதிநூல்களைத் தழுவியே திருக்குறள் இயற்றப்பட்டதென்ற கொள்கையுடையவர் என்பது வெள்ளிடைமலை. வடமொழி தென்மொழிகளை ஒக்கக் கற்றுத்தேர்ந்த நுண்ணறிவையுடைய பரிமேலழகரே அவ்வாறு கொள்ளின், அக்கொள்கை மிகவும் போற்றத்தக்கதன்றோ?

## 4. திருக்குறள் கீழ்க்கணக்குநூல்களுள் ஒன்று.

பொருள்நோக்கிலே ஏனையநூல்கள்பலவற்றினும் மிகமிகச் சிறந்தநூலாயிருந்தும், திருக்குறளைக் கீழ்க்கணக்கிலே ஒன்றாக வைத்து முன்காலத்தார் கூறியது பெரிதும் நோக்கத்தக்கது. தமிழிற்கு மறையெனச்சிறந்த இந்நூல் காலத்தால் முற்பட்டதாயின், மேற்கணக்குநூல்கள் என எண்ணிவகுத்த எட்டுத்தொகை முதலியவைகளில் இதையும் ஒன்றாக ஏன் சேர்க்கவில்லை?



"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி—மாமூல
மின்னிலைசொல் காஞ்சியுட னேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு."

எனக் கீழ்க்கணக்கிலே ஒன்றாகச்சேர்த்து அதிலும் பன்னிரண்டாவதுநூலாகவைத்துக் கூறியிருக்கின்றனர். கீழ்க்கணக்கு என்பது அதிக முக்கியமல்லாதநூல் என்று பொருள்படுமன்றோ? சங்க காலத்தே யியற்றப்பட்ட பழையநூலாயிருப்பின் திருக்குறளைக் கீழ்க்கணக்கிலே சேர்த்து ஒதுக்குவரோ? இதுவும் திருவள்ளுவர் காலத்தாற்பிற்பட்டவர் என்பதையே வற்புறுத்தும். மேற்கணக்கு, கீழ்க்கணக்கு என்ற முறைவகுப்பு பன்னிருபாட்டியற்சூத்திர இலக்கணத்திற் கடங்காதது இங்கு நோக்கத்தக்கது.

## 5. களவியலுரையில் திருக்குறள் குறிக்கப்படாமை.

இறையனார்களவியற்சூத்திரங்களுக்கு உரைசெய்தவர் நக்கீரர் எனப் பலர் கொள்கின்றனர். ஆனால் நக்கீரர் கூறினதாகவன்றி அவ்வுரையை யெழுதிவைத்ததாகக் கொள்ளற்கில்லை. கர்ணபரம்பரையாய்வந்த நக்கீரர் உரை, பிற்காலத்தே ஒருவரால் எழுதப்பட்டதென்பது முதற்சூத்திரவாயிலாகவே நன்குவிளங்குகிறது. அவ்வுரையில் மேற்கோளாக எடுத்துக்காட்டப்படும் கோவைப் பாடல்களாலும், அதையெழுதியவர் காலத்தால் நக்கீரருக்கு மிக மிகப் பிற்பட்டவர் என்பதும், நக்கீரர் கூறாத பல வரலாறுகளையும் அவரே புகுத்தியிருக்கவேண்டுமென்பதும் நன்கு விளங்கும். இதன்றியும், சங்கத்தொகைநூல்களின் எண்ணிக்கையை அவ்வுரை விசதமாகக் கூறுகின்றமையானும், வேறு உரைகள் அவ்வாறு கூறாமையானும் இதை எழுதியவர் காலத்தால் மிகவும் பிந்தியவராக வேண்டும் என்றும் அவ்வுரை வேறு பல உரைகளுக்கும் காலத்தாற் பிந்தியதாகவேண்டுமென்றும் கொள்ளின் இழுக்காகாது.

எனவே, நக்கீரர் களவியலுக்கு முதலில் உரைகூறியிருப்பினும், பிற்காலத்தேவந்தவர் தமக்குத்தெரிந்த பலவரலாறுகளையும் அவ்வுரையுடன்சேர்த்துக் கூட்டியும் குறைத்தும் எழுதியிருக்க வேண்டும். அவைகள் பெரும்பாலும் புனைந்துரையாகவு மிருக்கலாமாதலின், அவ்வுரையை ஆதாரமாகக்கொண்டு சரித்திர உண்மையைத் துலக்க இயலாதாயினும், ஒருகொள்கையை நிறுத்த வேறு

ஆதாரங்களிருப்பின் அவைகளை வலியுறுத்த இவ்வுரையை உதவியாக்கலாம்.

களவியலுரை எழுதியவர் முச்சங்கவரலாற்றினையும் அவ்வக் காலங்களிலிருந்த சிறந்த புலவர்களையும், அன்னாரியற்றிய சிறந்த நூல்களையும் எடுத்துக் கூறியுள்ளார். ஆனால், திருவள்ளுவரை முச்சங்கப்புலவர்களுள் ஒருவராகவாவது அவரியற்றிய குறள் நூலைச் சங்கநூல்களுள் ஒன்றாகவாவது சேர்த்துக்கூறவில்லை. திருவள்ளுவர் தம் குறளின்மகிமையால் கடைச்சங்கப்புலவர் பலரையும் பொற்றாமரைக்குளத்தே வீழ்த்தி அவர்கள்செருக்கை அடக்கியதாகப் பலர் கதைக்கின்றனர். அக்கதைப்பு உண்மையாயின் கடைச்சங்கப்புலவர்களுக்குத் திருவள்ளுவர் சமகாலத்தவராக வன்றோ இருக்கவேண்டும். செருக்கொடுங்கிய சங்கப்புலவர்கள் பலர் இறவாத புகழ்நூலாந் திருக்குறளின் பெருமையையுணர்ந்து திருவள்ளுவமாலையிற் காணப்படும் ஒவ்வொரு வெண்பாவையும் இயற்றியதாக அக்கதை கூறுகிறது. அக்கூற்று உண்மையாகித் திருவள்ளுவர் கடைச்சங்கப்புலவர்கட்குச் சமகாலத்தவராயின், அவரியற்றிய குறள் நூலைக் களவியலுரைகாரர் கடைச்சங்க நூலுடனாவது என் சேர்க்கவில்லை? கடைச்சங்கத்திற்கு நெடுங் காலத்திற்குமுன் குறள் ஆக்கப்பட்டிருப்பினும், அதைப் பல காலத்தே வாழ்ந்த சங்கப்புலவர்கள் புனைந்து வெண்பாக்கள் பாடியிருப்பினும், இடைச்சங்கநூலுடனாவது களவியலுரைகாரர் என் சேர்த்துக்கூறவில்லை?

நக்கீரர்கூடத் திருக்குறளின்பெருமையைப்பற்றிப் பாடியதாகத் திருவள்ளுவமாலை கூறுகின்றது. திருவள்ளுவமாலைவெண்பாவைப் பாடிய நக்கீரர் களவியலுக்குரையெழுதியிருப்பின், திருவள்ளுவரையும் அவர் குறள் நூலையும் முச்சங்கவரலாற்றிலே சேராது விடுப்பரோ? இதனால் திருவள்ளுவமாலைவெண்பாவை நக்கீரர் செய்திருப்பின், அவரே தற்பொழுது கிடைத்திருக்கும் வண்ணம் களவியலுரையைச் செய்திருக்கமுடியாதென்று ஏற்படுகிறது. களவியலுரையின் சரித்திர உண்மையை ஆராயப்புகின் அது மிகவும் விரியுமாதலாலும், அது இங்கு இடைப்பிறவரலாகுமாதலாலும், அதிலிருந்து நாம் ஒருமுடிவையேகொண்டு இதனுடன் நிறுத்துதல் நலம். அம்முடிவு நக்கீரருக்குக் காலத்தால் மிகப்



பிந்திய ஒருவரால் அவர் நினைந்தவண்ணம் உரையெழுதப்பட்டதென்பதே.

உரையை யார் எழுதியிருப்பினும் அதில் இடைப்பிறவரலாக வந்த சங்கவரலாற்றில் திருவள்ளுவரும் திருக்குறளும் குறிக்கப்படவில்லையென்பது வெள்ளிடைமலை. ஆயின், சிலர் கடைச்சங்கப் புலவர்களிற் சிறந்துவிளங்கிய கபிலபரணரைக் கூறவில்லையே என வினவலாம். ஆனால், அவர்களியற்றிய பாடல்களையேனும் புறப்பாட்டு நெடுந்தொகை கலித்தொகை முதலிய நூல்களிற் சேர்த்துக் கூறியிருக்கின்றனர். அவ்வாறுகூடத் திருக்குறளைச் சங்கநூலுள் ஒன்றாகக் கொள்ளவில்லை. திருவள்ளுவர் சங்ககாலப் புலவராயிருந்திருப்பின் களவியலுரைகாரர் அவரையும் அவர்நூலையும் கூறாது என் விடவேண்டும்? அவர்காலத்தில் திருக்குறள் சங்கநூலாகக் கருதப்படாமையே அவ்வாறு செய்ததற்குக் காரணமாயிருத்தல் வேண்டும். இதுவும் திருவள்ளுவர் கடைச்சங்கத்தார்க்குக் காலத்தாற் பிற்பட்டவர் என்ற கொள்கையையே வலியுறுத்தும்.

### 6. சங்கப்பனுவல்களிற் குறிக்கப்படாமை.

கபிலபரணர் முதலிய சங்கப்புலவர்பெயர்களை இடைப்பிறவரலாகவேனும், அவர்களுக்குச் சமகாலத்திலோ பிற்காலத்திலோ இருந்த சங்கப்புலவர்கள் கூறியிருக்கின்றனர். [1] "புலனழுக்கற்ற அந்தணாளன்" எனக் கபிலர்தன்மையை மாறோக்கத்து நப்பசலையாரும், [2] "இன்றும், பரணன்பாடினன் மற்கொன் மற்று நீ" எனப் பரணர்கவித்திறத்தை ஔவையாரும் முறையே பாடியுள்ளனர். தன்னிகரில்லாத் தனிப்பெருமைவாய்ந்த குறள்நூலைப்பற்றியாவது, அதையாக்கிய திருவள்ளுவர்கவித்திறனைப்பற்றியாவது திருக்குறள் அரங்கேறியவரலாற்றினைப்பற்றியாவது சங்கப்பனுவல்களிலே யொருகுறிப்பும் காணப்படவில்லை. எனவே திருக்குறள் கடைச்சங்கத்திலே அரங்கேறியவரலாறு பிற்காலத்தே கட்டப்பட்டு அக்கதைக்கேற்பத் திருவள்ளுவமாலையும் பிற்காலத்தேயிருந்த ஒருவராலோ பலராலோ சங்கப்புலவர்பெயராற் பாடப்பட்டதெனக் கொள்ளினும் இழுக்காகாது. கம்பராமாயணத்தில்

---

[1] புறப்பாட்டு. 126, 11. [2] புறப்பாட்டு. 99, 11-12.

வெள்ளியென்ற பிற்காலப்புலவன்பாடல்கள் ஏறியிருத்தலைக் கண்டார்க்கு இது ஒரு வியப்பாகத் தோன்றுது. மேல்நாட்டிற் புலவர்திலகமாய்விளங்கிய ஷேக்ஸ்பியர் இயற்றிய நாடகங்களிலும் பிறர்கூறிய பலஅடிகளேறியிருத்தலை ஆங்கிலங்கற்றோர் அறிவர். அக்காலத்துப்புலவர்கள் தாமியற்றும் பாக்களும் நூல்களும் மக்கட்குப் பயன்படவேண்டுமென்றுமட்டுங் கருதினரேயன்றித் தாமெழுதியவை தம்பெயரால் விளங்கவேண்டுமென்று சிறிதும் விழைந்தாரில்லை. தாமெழுதியவை, இசைநிறுத்திய புலவர் ஒருவர்பெயரால் வெளிப்படின், மக்கள் விரும்பிக் கற்பர் என்ற நோக்கத்தால், இவ்வாறு பிறர்பெயரால் நூல்களையும் பாடல்களையும் வெளியிடும்முறை, உலகசரித்திரத்திலேயே காணப்படும் ஒரு பெரிய உண்மையாகும். அவ்வாறே திருவள்ளுவமாலையும் கடைச்சங்கத்திற்குப்பிற்காலத்தே இயற்றப்பெற்றிருத்தல் கூடாததன்று. கடைச்சங்கப்பனுவல்களிலே குறளைப்பற்றிய குறிப்பின்மையால், திருவள்ளுவர் காலத்தாற் பிற்பட்டவர் என்பதும், குறள்நூல் கடைச்சங்கநாளிலே அரங்கேறியது கட்டுக்கதையென்பதும் நன்கு விளங்கும்.

[தொடரும்.]

ஆர். நரசிம்ஹன், B A. (Hons.)
தலைமைத்தமிழாசிரியர்,
நாஷனல்ஹைஸ்கூல்,
ரிஷிவேலி P. O.
சித்தூர்ஜில்லா.

உ

# பாண்டியர் வரலாறு.

[௧௩௯-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

## ஒன்பதாம் அதிகாரம்.

### தென்பாண்டிநாட்டில் ஆட்சிபுரிந்த பிற்காலப் பாண்டியர்கள்.

கி.பி. பதினான்காம்நூற்றாண்டின் பிற்பகுதிமுதல் பதினேழாம்நூற்றாண்டின் பிற்பகுதிவரையில் தென்பாண்டிநாட்டிற் சில பாண்டிய அரசர்கள் ஆட்சிபுரிந்துள்ளனர். அவர்கள் கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் அன்னோர்பெயர்களை யுணர்த்துமளவிலுள்ளனவேயன்றி வரலாற்றுண்மைகளை விளக்கக்கூடியனவாக இல்லை. அவர்கள் தலைநகர் யாது என்பதும் நன்குதெரியவில்லை. ஆயினும், கொற்கை, தென்காசி, கரிவலம்வந்தநல்லூர் ஆகிய ஊர்கள் அவர்கள் தலைநகரங்களாக இருந்திருத்தல்வேண்டும் என்பது உய்த்துணரப்படுகின்றது.

பதினான்காம்நூற்றாண்டின் இறுதியிலும் பதினைந்தாம்நூற்றாண்டின் தொடக்கத்திலும் தென்பாண்டிநாட்டில் அரசுசெலுத்திய பாண்டியர்களுள், பராக்கிரமபாண்டியன் என்றபெயருடையார் மூவர் இருந்தனர்[1]. அம்மூவருள் கி.பி. 1387-ல் திருக்குற்றாலத்தில் திருப்பணிபுரிந்தவன் ஒருவன்; கி.பி. 1384-முதல் 1415-வரையில் அரசாண்டவன் மற்றொருவன்; கி.பி. 1401-முதல் 1434-வரையில் ஆட்சிபுரிந்தவன் மற்றையோன். அன்றியும், அக்காலப்பகுதியில் சடையவர்மன் குலசேகரபாண்டியன், சடையவர்மன் விக்கிரமபாண்டியன் என்ற வேறிரண்டுமன்னரும் இருந்தமை அறியத்தக்கது. இவர்களுள், குலசேகரபாண்டியன் கி.பி. 1395-ல் பட்டம் பெற்றவன். இவன் கல்வெட்டொன்று கரிவலம்வந்தநல்லூரில் உள்ளது. அஃது இவ்வேந்தனது ஆணைத்திருமுக

[1] The Pandyan Kingdom page p. p 246 and 248.

மாகும்[1]. விக்கிரமபாண்டியன் கி.பி. 1401-முதல் 1422-வரையில் அரசுசெலுத்தியவன். இவன் கல்வெட்டுக்கள் திருக்குற்றாலத்திலும் திருப்புத்தூரிலும் உள்ளன[2]. இவர்கள் எல்லோரும் தென்பாண்டிநாட்டில் எவ்வெவ்விடங்களிலிருந்து எவ்வெப்பகுதிகளை ஆட்சிபுரிந்தனர் என்பது புலப்படவில்லை.

**சடையவர்மன் பராக்கிரமபாண்டியன்:**—பிற்காலப் பாண்டியர்களுள் இவ்வேந்தன் மிகுந்த பெருமைவாய்ந்தவனாவன். இவன் கி. பி. 1422 முதல் 1463 வரையில் அரசாண்டவன்; செந்தமிழ்ப் புலமையும் வடமொழிப்பயிற்சியும் உடையவன். இவனைப் பொன்னின்பெருமாள்[3] எனவும் மானகவசன்[4] எனவும் அந்நாளில் வழங்கியுள்ளனர். தென்காசிக்கோயிலிலுள்ள 'பூமிசைவனிதை நாவினிற் பொலிய' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி[5] இவனது போர்ச்செயல்களையும் திருப்பணிகளையும் குணச்சிறப்பையும் நன்கு விளக்குகின்றது.

இம்மன்னன், சங்கரநயினார்கோயில், திருக்குற்றாலம், முதலைக்குளம், வீரகேரளம்புதூர் முதலான ஊர்களில் தன் பகைஞரைப் போரில்வென்று புகழெய்தினான் என்று இவன் மெய்க்கீர்த்தி கூறுகின்றது. இவன் திருக்குற்றாலப்போரில்சேரனைவென்றான் என்பது, தளவாய் அக்கிரகாரச் செப்பேடுகளால் வெளியாகின்றது[6].

இவன் விந்தனூர்[7] முதலான ஐந்தூர்களில் அகரங்கள் அமைத்து அந்தணர்களுக்கு அளித்தமையும், திருக்குற்றாலம் திருப்புடைமருதூர் இவற்றிலுள்ள சிவாலயங்களில் மண்டபங்கள்

[1] Travancore Archaeological Series Vol. I. page 45.

[2] The Pandyan Kingdom page 248.

[3] Travancore Archaeological Series Vol. I. p 97.

[4] Do Do

[5] Do Do p. 91.

[6] Do Do pp. 126 and 133.

[7] செங்கோட்டைத்தாலூகாவிலுள்ள இவ்விந்தனூர்க்குப் பராக்கிரமபாண்டியச் சதுர்வேதிமங்கலம் என்ற பெயரும் முற்காலத்தில் இருந்தமை உணரத்தக்கது.



அமைத்தமையும், திருநெல்வேலியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்கு அர்த்தயாமவழிபாட்டிற்கு நிபந்தங்கள் விட்டமையும், இவன் மெய்க்கீர்த்தியால் அறியப்படுஞ் செய்திகளாம்.

இற்றைநாளினும் காண்போர்கண்களைக்கவரும் சிற்பநுட்பமும் வனப்பும் வாய்ந்த தென்காசிப்பெருங்கோயிலை இவ்வேந்தன் எடுப்பித்தது இவனது சிவபத்தியின் மாண்பினை இனிது புலப்படுத்தாநிற்கும். இவ்வாலயத்திற்கு நாள்வழிபாட்டிற்கும் ஆண்டுவிழாவிற்கும் தேவதான இறையிலியாகப் பலவூர்கள் இவ்வரசனால் அளிக்கப்பெற்றுள்ளன[1]. சிவபெருமான், ஒருநாள் இவ்வரசன்கனவில் தோன்றி வடகாசியிலுள்ள தம் திருக்கோயில் அழிவுற்றநிலையிலிருத்தல்பற்றிச் சித்திராநதியின் வடகரையில் தென்காசியும் அதில் ஓர் ஆலயமும் அமைக்குமாறு கூறியருளியதே, இதனை இவன் கட்டுவித்தமைக்குக் காரணமாகும்: இச்செய்தி, தென்காசிக்கோயிற் கோபுரத்தின்முன்னர்நிற்கும் ஒரு கற்றூணில் வரையப்பட்டுள்ளது[2]. இக்கோயிலின் திருப்பணி முடிவுபெறுதற்குப் பதினேழாண்டுகள் ஆயின என்பது அக் கல்வெட்டால் தெரிகிறது. ஆனால் இவன் தொடங்கிய ஒன்பதுநிலைக் கோபுரத்திருப்பணிமாத்திரம் இவனாட்சியில் முடிவெய்தவில்லை. இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள இறைவன்பால் இவன் கொண்டிருந்த பத்தி அளவிட்டுரைக்கத்தக்கதன்று. எத்தகைய குறைகளுமின்றி இக்கோயிலைப் பாதுகாத்துவருமாறு சிவனடியார்களையும் தன் வழித்தோன்றல்களையும் இம்மன்னன் வேண்டிக்கொண்டிருப்பது குறிப்பிடற்பாலதாகும். அவ்வேண்டுகோளும் சில செந்தமிழ்ப்பாடல்களாக உள்ளது. கன்னெஞ்சமுடையாரையும் உருக்கும் இயல்புடையனவும், எந்நிலையினரையும் பிணிக்குந்தன்மை வாய்ந்தனவும் ஆகிய அப்பாடல்கள் இவ்வரசன் இயற்றியனவேயாகும். அவற்றைத் தென்காசிக்கோயிற்கோபுரத்தில் இன்றும்

[1] Travancore Archaeological Series Vol I pp. 91, 92, 93 and 101

Do Do pp. 99 and 100

காணலாம்.[1] இப்பெருங்கோயிலிற் பிற்காலப்பாண்டியர்கள் எல்லோருக்கும் முடிசூட்டுவிழா நடைபெற்றுவந்தமை உணரற்பாலதாகும்.

இவன் தன்னாட்சியில் விசுவநாதப்பேரேரி என்ற பெயருடைய ஏரி ஒன்று வெட்டுவித்திருப்பது குடிகளது நலத்தின்பொருட்டு இவன் புரிந்த அரியசெயல்களுள் ஒன்றாகும்.[2] சிவபத்தியிலும் செங்கோன்முறையிலும் சிறந்துவிளங்கிய இவ்வேந்தன் கி.பி. 1463-ல் விண்ணுலகடைந்தான்.[3] [தொடரும்.]

T. V. சதாசிவபண்டாரத்தார்,

---

[1] 1. 'மனத்தால் வகுக்கவு மெட்டாத கோயில் வகுக்க முன்னின்
றெனைத்தான் பணிகொண்ட நாதன்றென் காசியை யென்றுமண்மேல்
நினைத்தா தரஞ்செய்து தங்காவல் பூண்ட நிருபர்பதந்
தனைத்தாழ்ந் திறைஞ்சித் தலைமீதி யானுந் தரித்தனனே.

2. ஆரா யினுமிந்தத் தென்காசி மேவும்பொன் னாலயத்து
வாராத தோர்குற்றம் வந்தாலப் போதங்கு வந்ததனை
நேராக வேயொழித் துப்புரப் பார்களை நீதியுடன்
பாரா ரறியப் பணிந்தேன் பராக்ரம பாண்டியனே.

3. சேலே றியவயற் றென்காசி யாலயந் தெய்வச்செய
லாலே சமைந்ததிங் கென்செய லல்ல வதனையின்ன
மேலே விரிவுசெய் தேபுரப் பாரடி வீழ்ந்தவர்தம்
பாலேவல் செய்து பணிவன் பராக்ரம பாண்டியனே.

4. சாத்திரம் பார்த்திங் கியான்கண்ட பூசைகள் தாம்நடத்தி
யேத்தியன் பால்விசுவ நாதன்பொற் கோயிலென் றும்புரக்கப்
பார்த்திபன் கொற்கைப் பராக்ரம மாறன் பரிவுடனங்
கோத்திரந் தன்னிலுள் ளார்க்கு மடைக்கலங் கூறினனே.

Travancore Archaeological Series Vol. I. pp. 96 & 97

[2] 'நாம் நவமாகக்கண்ட விசுவநாதப்பே ரேரிக்குப் பெருநான்கெல்லை யாவது'—Travancore Archaeological Series Vol. I. page 51.

[3] இவ்வேந்தன் வானுலகெய்தியஞான்று ஒரு புலவர் பாடிய பாடல் தென்காசிக்கோயிலிற் பொறிக்கப்பெற்றுள்ளது. அஃது அடியில் வருமாறு:-

கோதற்ற பத்தி யறுபத்து மூவர்தங் கூட்டத்திலோ
நீதற்ற வெள்ளிச் சிலம்பகத் தோசெம்பொ னம்பலத்தோ
வேதத் திலோசிவ லோகத் திலோவிசுவ நாதனிரு
பாதத் திலோசென்று புக்கான் பராக்ரம பாண்டியனே.

Travancore Archaeological Series Vol. I. page 97.

உ

## 1936-௵ ஏப்ரல்மீ 18௳ (தாது-௵ சித்திரைமீ 6௳) பகல் 12-மணிக்கு, தல்லாகுளத்தில் இராமநாதபுரம்மஹாராஜாஅவர்கள் பங்களாவில் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

---

1. மாட்சிமைதங்கிய கனம் இராமநாதபுரம் ராஜா R. ஷண்முகராஜேசுவர நாகநாதஸேதுபதிமஹாராஜா அவர்கள்,—அக்கிராசனாதிபதி.
2. மகா-ள-ள-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், B.A., B.L., M.L.C., —உப-அக்கிராசனாதிபதி.
3. ,, V. சுந்தரமையரவர்கள் B.A., B.L.
4. ,, N. R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள் B.A., B.L.

இவர்கள் வந்திருந்தார்கள்.

### தீர்மானங்கள்.

I. 1936-ஆம்௵ ஜனவரிமீ முதல் மார்ச்சுமீ முடிய உள்ள வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

II. 1936—1937-ஆம் ௵த்துச் சங்கமாபீசு வரவுசெலவு மதிப்புத் திட்டம் அங்கீகரிக்கலாயிற்று.

III. சங்கத்தின் 1935—1936 வருஷாந்தக்கணக்குகளைப் பரிசோதனை செய்ய, மதுரை ஹைக்கோர்ட்வக்கீல் மகா-ள-ள-ஸ்ரீ R. சேஷையங்கார் B.A., B.L. அவர்களை ஆடிட்டராக நியமிக்கலாயிற்று.

IV. மதுரை முனிசிபாலிட்டியிலிருந்து சங்கம் பாண்டியன்புத்தகசாலைக்கு வந்துள்ள நன்கொடை ரூ. 300-க்கும் புத்தகங்கள் சப்ளைசெய்யும்படி மகா-ள-ள-ஸ்ரீ E. M. கோபாலகிருஷ்ணக்கோனாரவர்களைக் கேட்டுக்கொள்ளவேணுமென்று தீர்மானிக்கலாயிற்று.

V. மதுரை பேய்ச்சியம்மன்துறை ரஸ்தாவிலுள்ள சங்கக்காலியிடத்தை மறுபடியும் மூன்றுவருஷங்களுக்கு மதுரை V. சோணைமுத்துத்தேவரவர்களுக்குக் குத்தகைக்குவிட்டிருப்பதுசம்பந்தமாக எழுதப்பெற்றுள்ள குத்தகைப் பத்திரம் அங்கீகரிக்கப்பெற்று அதில் கனம் அக்கிராசனாதிபதியவர்களின் கையெழுத்தும் இடலாயிற்று.

VI. சங்கத்தின் நிதிகள், நன்கொடைகள், சந்தாப்பாக்கிகள் வகையரா சம்பந்தமாக, சங்கத்தின் கௌரவகாரியதரிசிகள் எழுதிய மெமோ அங்கீகரிக்கலாயிற்று.

மதுரை,
18—4—1936.

*R. Shanmuga Rajeswaran,*
அக்கிராசனாதிபதி.

ஸ்ரீ:

# மதிப்புரை.

திருமுருகாற்றுப்படை:—இது ஸ்ரீ. வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியரவர்களால் எழுதப்பெற்ற விரிவுரையுடன்கூடியது. இவ்வுரை நச்சினார்க்கினியருரையைத் தழுவியுள்ளது. அதன் அருமை சிதையாமல் இளமாணவரும் எளிதினுணரப் பொருள்தெளிக்குந் திறத்தால் இது மிகவும் சிறந்ததென்று கூறஅமையும்.

பிற்காலத்தார் சிலர் திருமுருகாற்றுப்படையில் முருகவேளின் ஆறுபடைவீடுகூறப்பட்டனவாகக்கருதினரெனினும் அக்கொள்கை நச்சினார்க்கினியர்க்கு உடன்பாடன்றென்பது அவருரையான் அறியப்படும். ஆகையால் அப்பிறர்கருத்தினை இவ்வுரை வேண்டுமிடங்களிற் சுட்டி, அவற்றுட் சிலவற்றை மூலத்திற்கேலாதன எனவும் முடித்துச்செல்லுகின்றது. குன்றுதோறாடல், பழமுதிர்சோலைமலை என்பன தனித்தனி ஒவ்வொன்றென்னும் வரையறையன்றிப் பற்பலதலங்களையுங் குறிப்பன என்பதும், ஆவினன்குடி இன்னதென்பதும் அதன் பெயர்க்காரணமும், பண்டைக்கால மரபு, சிலஉவமைநயம், மற்றும் பல அருஞ்சொற்பொருள் முதலிய அனைத்தும் இவ்வுரையான் இனிது விளங்கும். திருமுருகாற்றுப்படையைப் பரீக்ஷைப்பாடமாகப் படிக்கும் மாணக்கர்க்கு இவ்வுரை சாலப் பயன்றருவதே. இளமையிலேயே பலநூற்பொருளையும் பிழையறப்பயிலுமாறு மாணவர்பொருட்டு இவ்வாசிரியர் உழைத்துவரும் நன்றி தமிழ்மக்கள் மறக்கற்பாலதன்று.

இப்புத்தகத்தின்விலை அணு 4. வேண்டுவோர் "17, தெளிசிங்கப்பெருமாள்கோவில்தெரு, திருவல்லிக்கேணி" என்ற விலாசத்தில் ஆசிரியரவர்களிடம் பெறலாம்.

சித்தர் ஆரூட விஷவைத்தியம்:—இஃது ஒரு பழந்தமிழ்நூலாகும். சிந்து என்னும் செய்யுள்நடையில் இது மிகத் திருத்தமாக இயன்றுள்ளது. இதில் பாம்புகளின் பிறப்பு, அவற்றின் இயல்பு, அவற்றின் நஞ்சினை அகற்றற்குரிய மருந்துகள் முதலிய எத்துணையோ பல அரியவிஷயங்கள் மிகத் தெளிவாகவும் இனிமையாகவும்



எடுத்துரைக்கப்படுகின்றன. தமிழ்க்கலையின் ஒரு பகுதியான மருத்துவநூலுணர்ச்சிக்குச் சாதனமாயுள்ள இதனைத் திருத்தமுற அச்சிட்டுதவிய சோதிடவைத்தியத் தமிழறிஞர் Pt. நடராஜன் அவர்களின் நன்முயற்சி பாராட்டற்குரியது. இப்புத்தகத்தின் விலை முதலிய விவரம், "Pt. நடராஜன் அவர்கள், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்" என்ற விலாசத்திற் றெரிந்துகொள்க.

முருகமணிமாலை:—இது, தமிழ்க்கவிவாணரும் சைவத் திருவாளருமான மதுரஞ் சுந்தரபாண்டியனார் அவர்கள், திருப்பரங்குன்றக் குமரக்கடவுளைப் பாடிப்பரவிய பாமாலையாகும். இதன் செய்யுட்கள் மிக்க இனிமையும் உருக்கமும் வாய்ந்து திருந்தியநடையிற் பொருந்தியுள்ளன. அரும்பதவுரை முதலியவற்றுடன் அச்சிடப்பெற்ற இப்புத்தகத்தின் விலை அணு 2. வேண்டுவோர், "பி. நா. சிதம்பரமுதலியார் பிரதர்ஸ், புக்ஷாப், புதுமண்டபம் மதுரை" என்ற விலாசத்திற் பெறலாம்.

திருவருணையமகவந்தாதி:—சேலம் காலேஜ் தமிழ் விரிவுரையாளரான திம்மப்ப அந்தணனார் என்பார் இதனை இயற்றியுள்ளார். யமகவந்தாதி யென்னும் சொற்றொடர்நிலைச்செய்யுளமைத்தல் மிக அருமையென்பதை யாவரும் அறிவர். ஆயினும், அம்முயற்சியை மேற்கொண்ட இவ்வாசிரியருடைய தமிழ்க்கவியார்வமும், தெய்வவழிபாடும் சாலச் சிறந்தன என்னலாம். முப்பத்திரண்டு செய்யுட்களேயுள்ள இப்புத்தகம் முதற்பாகமென்றும் எஞ்சிய பகுதி இனி வெளிவரக்கூடுமென்றும் தெரிகிறது. இதன் விலை அணு 1. வேண்டுவோர், "Pandit S. R. Thimmappa Iyer, Lecturer in Tamil. Municipal College, Salem" என்ற விலாசத்திற் பெறலாம்.

பைந்தமிழ்ச்சோலை (அன்புமலர் 1.):—இங்ஙனம் பெயர்புனைந்த புத்தகவெளியீடு சிங்கப்பூர் 'அன்புநிலயம்' என்னுமிடத்தினின்று தோன்றியுள்ளது. சுவாமி சுத்தாநந்தபாரதியார் என்பார் இம் முதன் மலரை ஆக்கியோராவர். தமக்கியலுமாற்றாற் பல தமிழ்ப்பணி புரிந்து அன்பர்கள் உளத்தில் இன்பம் விளைக்க முற்படுகின்ற அவருடைய இத்தகைய நன்முயற்சிகள் ஆதரிக்கத்தக்கனவே.

தமிழ்மொழியாளர் அறிந்து கடைப்பிடித்தற்குரிய அரும்பொருள்கள் பல இப்புத்தகத்தின் கட்டுரைகளில் அடங்கியுள்ளன. இதன் விலை அணா 4. வேண்டுவோர், "அன்பு நிலயம், 11. டாங்க்ரோடு, சிங்கப்பூர்" என்ற விலாசத்திற் பெறலாம்.

**தாதுவருஷ வாக்கியபஞ்சாங்கம்:**—யாழ்ப்பாணத்து இரகுநாதையர் சோதிடபரிபாலனமடம் தன் பெயருக்கேற்ப அத்துறையிற் சிறந்த தொண்டாற்றிவருதல் பலரும் அறிந்தது. அம்மடத்தின் உரிமையாளர்கள், பலதலைமுறையாக மிகவும் ஆற்றலமைந்த பண்டிதர்களாற் கணிக்கப்பெற்ற சுத்த வாக்கிய கணித பஞ்சாங்க வெளியீட்டாலும் உலகிற்குப் பெருநன்றிபுரிகின்றனர். அவற்றுள் இத் தாதுவருடப்பஞ்சாங்கமும்வழக்கம்போலவே செவ்வனம்அமைந்து சோதிடநுட்பங்கள் பலவற்றையும் அறிதற்குச் சிறந்த கருவியாய் விளங்குகின்றது. இதன் விலை அணா 4 (சதம் 25). வேண்டுவோர், "இ. சி. இரகுநாதையர், சோதிடபரிபாலனமடம், கொக்குவில் (இலங்கை)" என்ற விலாசத்திற் பெறலாம்.

---

## ஓர் ஐயவினா.

தொல்காப்பிய எழுத்ததிகாரப் பாயிரவுரையில், எழுத்து உரு என்பதைப் பிரமாணப்படுத்துமாறு எடுத்துக்காட்டிய 'செறிப்பச் சேறலானும், செறிப்பவருதலானும் இடையெறியப்படுதலானும் உருவுமுருவுங் கூடிப் பிறத்தலானும்' என்பன முதலிய ஏதுக்களின் பொருளை அறிந்த புலவர்கள் இச் செந்தமிழ்வழியாக விளங்க வைப்பின், அது தமிழுலகிற்குச் செய்த பெருநன்மையாகும். ஆதலின் அவற்றையும், துலாக்கோலுக்குச் சொல்லப்பட்ட 'மிகினும் குறையினும் நில்லாதாகலும்' என்றபகுதியையும், ஆனேற்றியலையும் விளங்கவைக்குமாறு வேண்டிக்கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்,
ச. சுப்பிரமணியபிள்ளை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.



### பாங்கி தலைவிக்குத் தலைவன் செலவுணர்த்தல்.

266. அருவா யருவுரு வாயுரு வாகிய வண்ணல்வைகும்
திருவார் புயல்வண்ண னேத்துஞ் சிராமலைச் சேயிழையாய்
ஒருவா நமதன்பர் தம்பதிக் கேகவொ ரேதுவுண்டாய்
வருவாம் விரைந்திங்ங னேயென் றேகினர் வாடலையே. (ரு)

### தலைவி நெஞ்சோடு கிளத்தல்.

267. நந்தியை யூர்தரு மெம்மான் சிராமலை நாடுமன்பர்
தந்தியை வீட்டிய வன்றுசெய் வஞ்சினந் தாமறந்தென்
புந்தியை மாழ்குவித் தேகச்செய் யூழின் புணர்ப்புணரா
தந்தியை யைங்கணை வேளைநெஞ் சேநொந்திங் காவதென்னே.

### காமம் மிக்க கழிபடர் கிளவி.

268. அளையா ரரவக் குழையார் சிராமலை யன்னமன்னர்
வளையார் திரைக்கரத் தான்முத்தம் வாருபு வண்டலிட்டு
விளையா டிடுங்கட லேயெனைக் கூடி விழைந்தணைந்து
திளையா தவணகல் போதென் புகன்றனர் செப்புகவே. (எ)

---

266. அருவாய்.....அண்ணல்: "அருவ ருருவ ருருவுரு வாள ரவிர்புகலித், திருவர்" (சீகாழிக்கோவை, 156.) வைகும் சிராமலை; ஏத்தும் சிராமலை. ஏது - காரணம். உண்டாய் - உண்டாகப்பெற்று. வாடலை - வாடாதே.

267. வஞ்சினம் - பிரியேனென்ற உறுதிமொழி. ஊழின் புணர்ப்பு - ஊழ்வினையின் செய்கையை. அந்தியை - மாலைக்காலத்தை.

268. அளை - புற்று; இங்கே சாதியடை. வளை - சங்கு, வளையல். வண்டல் - மண்வண்டல், மகளிர்விளையாட்டு. கடல் ஒருமகளாக உருவகஞ்செய்யப்பெற்றது. திளையாது - இன்புறுமல். மன்னர் என் புகன்றனர்?

தலைவியைப் பாங்கி ஆற்றுவித்தல்.

269. அருளா லெனைத்தடுத் தாள்வோன் சிராமலை யாயிழையாய்
மருளா வுயிர்நமக் காவியி லீந்து மகிழ்ந்தணைந்தார்
பொருளார் புகழும் புயமாலை வாசம் புணர்ந்ததிங்குத்
தெருளார் தரவினித் தேரோதை கேட்குஞ் செவிகளுக்கே. ()

பாங்கி தலைவிக்கு இறையோன் வந்தமை உணர்த்தல்.

270. திருவே மகிழ்மட்டு வார்குழல் பாகன் சிராமலையிற்
றருவே யெனமுன்பு வந்தின்பு தந்து தணந்தவர்தாம்
உருவே ளெனவந்து தோன்றினர் தேரிவ ணூர்ந்துருவம்
அருவே யெனுமத வேளுநின் மாலு மகன்றிடவே. (௬)

வந்தோன்றன்னொடு நொந்து வினாதல்.

271. ஆடு நிமலன் சிராமலை வாழுன் னணியிழைமான்
நீடு நினது பிரிவினின் வாடி நெடிதுயிர்த்துத்
தேடு மெனது முகநோக்கி விம்மிடுந் தேம்பியழும்
வாடு மிவைகண்டும் வாளா திருந்தனன் மன்னவனே. (௧0)

---

269. மருளா - நம்பால் மயங்கி. உயிரை ஆவியில் ஈந்து: இது புனறருபுணர்ச்சியைச் சுட்டியது; ஆவி - குளம், உயிர். உயிரை ஆவியிலீந் தென்றது ஒரு நயம்; "முன்னு ணமக்குயி ராவியி லீந்த முதல்வர்" (கோடீச். 180.) பொருளார் புகழ் - உண்மைப் புகழ்; "இறைவன், பொருள்சேர் புகழ்" (குறள், 5.) அம்புயமாலை - அழகிய தோளிலுள்ள மாலை; தாமரை மாலையென்பது வேறொருபொருள். தலைவன் வருதலை அவனது தோள்மாலை யின் நறுமணம் வந்து குறிப்பித்தது; "கார்வாழுங்கண்டர்" (கலைசைக். 270) என்னும் செய்யுளைப்பார்க்க. தெருள் - தெளிவு.

பி-ம். 'அருளா லெனைப்புகுந் தாள்வோன்'

270. திருவே: விளி. மகிழ் - மகிழ்வாயாக. மட்டுவார்குழல்: திரிசிராமலையம்பிகையின் திருநாமம். உரு வேள் என - உருவத்தையுடைய மன்மதனைப்போல. தேர் ஊர்ந்து தோன்றினர். உருவம் அருவேயெனும் - தன் உருவம் அருவமே என்னும். மால் - மயக்கம்.

271. மானென்றது தலைவியை. தேடும் - தேடுவாள். வாளாது இருந் தனன் - சும்மா இருந்தேன்.

பி-ம். 'வாடா திருந்தனன்'



தலைவன் பாங்கியோடு நொந்து வினாதல்.

272. கார்க்குன் றுரித்தவ னெம்மான் சிராமலைக் காரிகையீர்
வார்க்குன் றனப்படை யோனலர் வாளியு மாமணந்தேன்
போர்க்குங் குழற்கொடி யார்வா யலரும் பொறுத்தனிரோ
ஆர்க்குந்தெளிப்பருமால்கொளென்போலிங்கயர்ந்திடைந்தே.

பாங்கி ஆற்றுவித்திருந்த அருமை கூறல்.

273. கார்காட்டி யார்மணி கண்டர் சிராமலைக் காவலவுன்
ஊர்காட்டி யூர்சென் னெறிகாட்டி யாங்குள வொண்பொழிலின்
சீர்காட்டி நீசொன் மொழிதேறு மென்னுரைத்தெப்பமின்கண்
நீர்காட்டி யாரிடர் வாரியை நீந்து நிலைசெய்ததே. (௧௨)

## ௧அ. வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிதல்.

என்பொருட் பிரிவுணர்த்து ஏந்திழைக்கேன்றல்.

274. என்னுசை நீக்கி யெனக்கோர் மொழியினி னின்புதந்த
மன்னுசை யாடைய னெம்மான் சிராமலை மானனையாய்
பொன்னுசை தீரக் கொடுப்பா னுமர்க்குப் பொருட்ககன்று
மின்னுசை யைப்பெற்று மீள்வேன் புகலந்த மெல்லியற்கே. ()

---

272. கார்க்குன்று - யானை. வார்க்குன்று - தனங்கள்; அவற்றை உடைய அன்னங்கள், மகளிர்; அவரைப் படையாக வுடையவன் மன்மதன். பெரிய மணத்தையும் தேனையும் போர்க்கும்; தேன் - வண்டு. கொடியார் - கொடியைப்போன்றவர்; கொடுமையையுடையோர். இடைந்து - பின்னிட்டு. இடைந்து பொறுத்தனிரோ ?

273. ஊர், நெறி, பொழிலின்சீர் என்பவற்றைத் தலைவன் காட்டி யது, பாங்கிக்கு. காட்டிச் சொல்லும் மொழியெனக் கூட்டுக. நீரைக்காட்டிப் பொருந்திய இடர். என் உரையாகிய தெப்பம் இடராகிய வாரியை நீந்தும் நிலையைச் செய்தது.

274. ஆசை நீக்கி - குற்றத்தை நீக்கி. ஆசை ஆடையன் - திக்கை ஆடையாகவுடையவன். நுமர்க்குப் பொன்னை ஆசைதீரக் கொடுக்கும் பொருட்டு. மின் ஆசையை - மின்னுகின்ற பொன்னை.

பி-ம். 'மின்னுசையிற்பெற்று'

### நின்பொருட் பிரிவுரை நீ அவட்கென்றல்.

275. பொழியுங் கருணைப் பிரான்வாழ் சிராமலை போற்றியென்று
பழியும் புகழு மறிந்தல காண்டருள் பார்த்திபநீ
மொழியுஞ் செலவினை நீயே யவட்கு மொழிந்துபிரிந்
தழியுந் துயரற வாற்றியங் கேகி னதுவழக்கே. (௨

### நீடேனென்றவன் நீங்கல்.

276. பாதி மதியணி யெம்மான் சிராமலைப் பாவையையான்
நீதி யொடுமணஞ் செய்யவல் லேநிதி நேயவனு
பூதி யுடையர் பெறும்பே றெனப்பெற்றுப் போதகமேல்
வீதி தொறுநுமர் கண்டிங்கு வாழ்த்திட மேவுவனே. (௩

### பாங்கி தலைவிக்கு அவன் செலவுணர்த்தல்.

277. மாதே நமர்கண் மகிழ்ந்திட வான்பொருள் வாரணங்கள்
மீதே கொடுவந் துனைநாளை வேட்டிட வேண்டியிது
போதே யமலன் சிராமலை வாழ்த்தலர் போற்கடத்திற்
றூதே யலர்மலர்த் தாரன்ப ரேகினர் தாம்விரைந்தே. (௪

### தலைமகள் இரங்கல்.

278. உரியேனெனவெனைத் தன்னடி யாரொடுமுய்யக்கொண்டோன்
அரியே யறிவருந் தாளோன் சிராமலை யாண்டகையார்
பிரியே னெனவுண்மை தந்தும் பிரிந்தனர் பேதைமின்னே
தரியே னினியுயிர் தாங்கே னெனக்கென்ன சாற்றுதியே. (௫

---

275. அழியும் - மிகும். அற ஆற்றி - முற்றும் ஆறச்செய்து. வழக்கு பெரியோர் செல்லும் வழி.

276. வல்லே - விரைவில். நிதியைப் பெற்று. போதகம் - யானை.

277. வாரணங்கள் மீதே - யானைகளின்மேல். வேட்டிட - மண செய்துகொள்ள. கடத்தில் - பாலைநிலத்தில். தாது - பூந்தாது.

278. உரியேனென - ஆட்கொள்ளுதற் குரியேனென்று.



### பாங்கி கொடுஞ்சொற் சொல்லல்.

279. மின்னே நிகர்வடி வேலினர் நின்மணம் வேண்டிநிதி
கொன்னே கொடுவர மேவின ராதலிற் கோகனகப்
பொன்னே யமலன் சிராமலை வாழ்த்தலர் போற்கலுழ்ந்தால்
என்னே யிவட்கிவ ணுற்றதென் றியாவரு மெண்ணுவரே. ()

### தலைவி கொடுஞ்சொற் சொல்லல்.

280. மின்னார் சடையிடை யார்பிறை யஞ்சிட வெவ்வரவைப்
பொன்னா ரணியெனக் கொள்வோன் சிராமலை போற்றுமன்பர்
என்னா ருயிருலை வாய்மெழு காகி யினைந்துமின்னே
பன்னா ளலமரச் சென்றா ரவரருட் பான்மைநன்றே. (௭)

### வருகுவர் மீண்டெனப் பாங்கி வலித்தல்.

281. வேலை விடமுண் மிடற்றார் சிராமலை மேவுமன்பர்
சேலை நிகர்விழி யாய்மீள்வர் மாழ்கலை செந்தழலார்
பாலை யினிற்பெடை மேவப் புறவு பரிந்திறகாற்
சால வணைத்தணைத் தார்வது காணிற் றரிக்கிலரே. (௮)

### பருவங்கண்டு பெருமகள் புலம்பல்.

282. அலர்தரு கொன்றையின் கீழலர் பூவை யருட்பரமன்
மலரடி போற்றிசெய் மாலென வாய்ந்திட வந்ததுகார்
பலரடி யார்பணி யெம்மான் சிராமலைப் பாவைவரா
விலர்பொருட் காகவங் கேகிய காதல ரின்னமுமே. (௯)

---

279. கொன் - பெருமை. உற்றது என்னேயென்று எண்ணுவர்.

280. சடையிடத்தே ஆர்ந்த. உலைவாய் மெழுகு - உலையின்கண்ணே வைத்த மெழுகு. அலமர - சுழல.

281. மாழ்கலை - மயங்காதே. பெடை மேவ - பெண்புறவு விரும்ப. புறவு - புறா. பரிந்து - அன்புற்று. ஆர்வது - இன்புறுவதை.

282. பூவை - காயாமரம். கொன்றை சிவபெருமானுக்கும் பூவை திருமாலுக்கும் உவமை. கார் - கார்ப்பருவம். அடியார் பலர். பாவை: விளி. இன்னமும் வரவிலர். இன்னம்: "இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே" (தே. திருநா.); "அயிலா ளன்னமுமே துயிலா ளின்னமுமே" மதுரைக் கலம். 59.

இதுவுமது.

283. பந்தப் பவந்தொலைத் தாள்வோன் சிராமலை பாடினர்க்குத்
தந்தச் சிவிகை தருமாரி யப்பன் றடக்கைநிதி
முந்தச் சொரிவ தெனநீர் சொரிந்திங்கு மொய்த்ததுகார்
கந்தக் கருங்குழ லாயினம் வந்திலர் காவலரே. (௧௦)

இதுளை வம்பென்றல்.

284. பண்பான் மறையவ ரூட்டுஞ்செந் தீயவிப் பாகத்தினால்
விண்பான் மருவிய வம்பாகு மேகத்தை மெய்யதென்றே
நண்பா னமைத்தடுத் தாள்வோன் சிராமலை நன்னுதலாய்
பெண்பான் மதியின் மயங்கினை காலத்தின் பெற்றியன்றே. ()

இதுவுமது.

285. நீடு மிராய வருணா சலன்மநு நீதியினால்
நாடு மதிதொறும் பெய்வது போலிற்றை நாளுமுகில்
பீடு பெறவம்பு பெய்திட வந்தது பேதுறன்மால்
தேடு மலர்ப்பதத் தெம்மான் சிராமலைச் சேயிழையே. (௧௨)

இறைமகள் மறுத்தல்.

286. கானஞ் செறிகுழல் பாகன் சிராமலைக் கார்மயிலாம்
நானஞ் செறிகுழ லாயன்பர் வாய்மையி னண்ணுமுன்சொல்
வானஞ் செறிமுகில் வம்பாகிற் றீப்பொறி மானமிக்கித்
தானஞ் செறிந்துபல் கோபம் படர்வதென் சாற்றுகவே. ()

---

283. சிவிகை - ஒருவகைப் பல்லக்கு. கந்தம் - நறுமணம்.

284. வம்பாகுமேகம் - காலமல்லாத காலத்திற் பெய்யு மேகம்; "வம்பார்குன்றம்" (தே. திருக்குற்றாலம்.) பெண்பான்மதி - பெண்புத்தி.

285. அருணாசலராயன் செலுத்தும் மநுநீதியினால். அம்பு பெய்திட- மழை பெய்திட; வம்பென்னும் பொருளும் தொனிக்கின்றது. பேதுறல் - மயங்காதே.

286. காட்டைப்போலச் செறிந்த குழல்; "குழற், காடுஞ் சுமக்குங் கரும்பே" (சகலகலாவல்லிமாலை, 2.) நானம் - கத்தூரி. நண்ணுதற்கு முன்பு. இத்தானம் - இவ்விடத்தில். கோபம் - இந்திரகோபப்பூச்சி; இது மழைக் காலத்திற் றோன்றுவது. மானம் மிகுந்து கோபம் உண்டாவதென்பது வேறொரு பொருள்.



அவர்தூதாகி வந்தடைந்தது இப்பொழுதெனத் துணைவி சாற்றல்.

287. நின்றே கவன்றயர் வொன்றேல் சிராமலை நேயர்க்கன்பர்
குன்றே யெனுமிப மொன்றே பலநிதி கொண்டுவர
நன்றே கனிமொழி யின்றே வருகுவர் நாமுணர
என்றே முனமுகில் சென்றே யியம்பவிங் கெய்தியதே. (௧௪)

தலைமகள் ஆற்றல்.

288. ஒன்றே யுனக்கு மெனக்கு முயிரென் றுரைத்தணைந்தார்
சென்றே யுறினவர் சீரருட் கென்னை சிறப்பெனுளம்
மன்றே யெனவுறைந் தாள்வோன் சிராமலை வாழ்முகில்கள்
இன்றே யெனையவர் மேவுந் திறஞ்சொல வெய்தனன்றே. ()

அவன் அவட் புலம்பல்.

289. தண்ணார் புனல்சடைக் கண்ணார் சிராமலைத் தாழ்குழலாள்
கண்ணார் தருபுனல் விண்ணா றெனவருங் காதலெழ
எண்ணார் தருபிரி வெண்ணாநைந் தேங்கியங் கென்செயுமோ
புண்ணார் தரவுள நண்ணாரி னேகும் புயலுமன்றே. (௧௬)

---

287. அயர்வு ஒன்றேல் - சோர்வை அடையாதே. . இபம் - யானை. கனிமொழி: விளி. சென்றே - வந்தே.

288. சென்றே உறின் - சென்று அவ்விடத்திலேயே தங்கியிருந்தால். அவர் சீர் அருட்குச் சிறப்பு என்னை? தங்காரென்பது கருத்து. என் உள்ளத்தை. என் உளம் மன்றே யென வுறைந்து: "சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும், உறைவான்" (திருச்சிற். 20) என்பதை இப்பகுதி நினைப்பிக்கின்றது.

289. விண்ணாறு - கங்கை. எண்ணத்தின்கண் ஆர்ந்த பிரிவை நினைந்து. உளம் புண்ணார்தர, நண்ணாரின் - பகைவரைப்போல.

ரகனோடு சொல்லல்.

290. பெண்பா லிடத்தமர் பெம்மான் சிராமலைப் பேதைமலர்க்
கண்பாய் தருபுனல் கூடலை மாற்றக் கவன்றயர்வாள்
நண்பா கிலரை யடவன் றிரத நடத்துதல்போற்
பண்பா நடத்தவ ணம்மன வேகம் பயந்திடவே. (களு)

மேகத்தோடு சொல்லல்.

291. மோன வயித்திய லிங்கமெய்ஞ் ஞான முனிசெயுமன்
பான பணிக்கரு ளெம்மான் சிராமலை யார்முகில்காள்
நான மலர்க்குழ லாட்குரை யாடுமி னுங்கணத்திற்
றான மலைக்குல மேனிதி கொண்டவட் சார்துமென்றே. ()

---

290. இடப்பாகத்தின்கண் பெண்பால் அமரப்பெற்ற. கூடல்-கூடற் சுழியை; தலைவரைப் பிரிந்த மகளிர் அவர் வரவை எதிர்நோக்கிப் பார்க்கும் நிமித்தங்களுள் இஃது ஒன்று; மணலிற் சுழியைச் சுழித்துப் பார்க்கையில் அது முதலும் கடையும் கூடுமாயின் வருவரென்றும் கூடாதாயின் வாரா ரென்றும் கொள்ளுதல் மரபு. இது, "நீடு நெஞ்சு ணினைந்துக ணீர்மல்கும், ஓடு மாலினொ டொண்டொடி மாதராள், மாட நீண்மரு கற்பெரு மான் வரிற், கூடு நீயென்று கூட லிழைக்குமே" (தே. திருநா.); "தாழ்கடற் சேர்ப்பன் றாரகல நல்குமேல், ஆழியாற் காணுமோ யாம்" (ஐந். ஐம். 43); "அழைப்பன் திருவேங் கடத்தானைக் காண, இழைப்பன் திருக்கூடல் கூட—மழைப்பே, ரருவி மணிவரன்றி வந்திழிய யானை, வெருவி யரவொடுங்கும் வெற்பு" (நான்முகன்றிருவந். 39) என்பவற்றாலும், நாச்சியார்திருமொழி, 4-ஆந் திருமொழிப் பாசுரங்களின் இறுதியடிகளாலும் விளங்கும்; கூடற் சுழிகளை எண்ணிப்பார்த்தலும் உண்டு; இது, "ஆழி திருத்திச் சுழிக்கணக் கோதினை யாமலைய, வாழி திருத்தித் தரக்கிற்றி யோவுள்ளம் வள்ளலையே" (திருச்சிற். 186); 'கூடற்சுழியாவது: வட்டமாகக் கோட்டைக் கீறி அதற்குள்ளே சுழிசுழியாகச் சுற்றுஞ் சுழித்து இவ்விரண்டுசுழியாகக் கூட்டினால் இரட்டைப்பட்டாற் கூடுகை; ஒற்றைப்பட்டாற் கூடாமை யென்று சங்கேதம்' (நாச்சியார்திருமொழி வியாக்யானம்) என்பவற்றாலும் விளங்கும். "கூட லிழைத்திழைத் தங்குலி தேய" (443) என்பர் பின். நண்பாகிலரை - பகைவர்களை. அவண் நடத்து.

291. மோனம் - மௌனம். வைத்தியலிங்க முனிவரென்பவர் மலைக்கோட்டையில் மௌனசுவாமி மடத்தில் முன்பு இருந்து ஸ்ரீதாயுமானவர் திருக்கோயிற் கட்டளையதிகாரியாக விளங்கிப் புகழ்பெற்றவர். நானம் - வாசனை. தானமலை - யானை; தானம் - மதம்.



13. மல்லிநா டாளும் மெல்லிய லினக்கு
வலியரா வயிற்றுயில் பயில்வோன்
சொல்லுமா சுகமா விரதமே யவன்
றொல்லையம் புமான்சுயம் வரத்தில்
வல்லவ னானா னெங்ஙனென் றென்றும்
மருவுதோ ழியர்சொலு நகைப்புப்
புல்லிய மொழிகள் நின்பெருங் காதல்
போதவுந் தகுமெனல் புகலும்.

**பதவுரை:—** மல்லிநாடு ஆளும் மெல்லியல் - திருமல்லிவளநாட்டைப் பரிபாலித்தருளும் மிருதுவான சுபாவமுடையீர்; நினக்கு - உமக்கு; வலியராவயில் துயில்பயில்வோன் - வலிய பாம்பின்மீது எப்பொழுதும் நித்திரை செய்துகொண்டிருப்பவன்; எங்ஙன்-எப்படி; சுயம்வரத்தில்-நீயாகவே வரித்துக்கொள்ளுங் கல்யாணத்திலே; வல்லவன் ஆனான் - பதியாக ஆயினான்; சொல்லும் - சிறப்பித்துச் சொல்லப்படும்; ஆசுகம் ஆ - பட்சியாகிய; இரதம் மேயவன் - தேரையுடையவன் (வாகனத்தையுடையவன்); [ஏயவன் என்று பிரித்தாலும் பொருள் இதுவே]; எங்ஙனம் சுயம்வரத்தில் வல்லவனானான்; தொல்லையம்புமான்-புராணபுருஷன் (மிகவும் வயோதிகன்), எங்ஙனம் சுயம்வரத்தில் வல்லவனானான்; என்று என்றும் மருவுதோழியர்-என எக்காலமும் பிரியாத உயிர்த்தோழியர்கள்; சொலும் - சொல்லுகின்ற; நகைப்புப்புல்லிய மொழிகள் - பரிகாசத்தைப்பொருந்திய வார்த்தைகள்; நின் பெருங்காதல் - தேவரீருடைய பிரணயம்; போதவும் - மிகவும்; தகுமெனல் - உசிதமானதென்பதை; புகலும் - சொல்லுவனவாகும் எ-று.

**கருத்து:—** சரீரசௌக்கியங்களையெல்லாம் அனுபவித்தற்குத் தகுதியான சகல சம்பத்துக்களையும் இளமைப்பருவத்தையுமுடைய உனக்கு அதற்குநேரே விரோதமான வறுமையைக்குறிக்கும் பாம்பைப் படுக்கையாகவுடையவன், பட்சியை வாகனமாகவுடையவன், முதுமைப்பருவத்தையுடையவன் நீயே தேடிக்கொண்ட மணவாளனாகிய தெவ்வாறு என்று தோழியர்சொல்லும் பரிகாசவார்த்தைகள், அநந்தசாயித்வமும், கருடவாகனத்துவமுமாகிய சர்வாதிகத்வலட்சணத்தையும், அகில ஜகத் ஜன்மாதி காரணத்வத்தையுமுடைய திருத்தக்கசெல்வரான திருவரங்கமன்னனாரை அழகியமணவாளனாக வரித்த நின் பெருங்காதல் மிகவும் தகுதியானதேயென்று தோத்திரமாக அமைந்தது என்பது. இங்ஙனேயன்றிப் பிறப்பே

காரணமாகப் பெரும்பகைமைபெற்றிருக்கிற பாம்பையும் கருடனையும் பகையில்லாமல் ஓரிடத்தில் நேசமாக வாழும்படி அவைகளை அடிமைகொண்டருளும் அகடிதகடனாசாமர்த்தியத்தையும், அகிலபுவனஜன்மாதிகளுக்கு அகிலகாரணமாகவிருக்கையும் உடைய திருவரங்கமன்னனாரை நினக்குச் சுயம்வரபதியாகக்கொண்ட நின் பெருங்காதல் மிகுதியும் தகுதியானதேயென்று தோத்திரமாக அமைந்ததென்பதுமாம்.

**விசேடக்குறிப்பு:**—மல்லிநாடு என்றது வராகக்ஷேத்திரத்தை. இதிலுள்ள **வடேச்சுரபுரம்** என்னும் புராதனநகரத்தை ஸ்ரீவில்லிபுத்தூரென்று புதுப்பெயரெய்தும்படி ஜீர்ணோத்தாரணஞ்செய்த **வில்லி**யென்னும் வேடராஜனுடைய தாயாகிய **மல்லி**யென்பவளா லாளப்பட்டதாலே இது மல்லிநாடாயிற்று. ஆளும் என்றதினால் ஆளுகைக்குரிய ஞானசக்தியாதிகளாகிய ஆத்மகுணங்களும் மெல்லியலென்றதனாலே, சௌகுமார்யம், சௌந்தர்யம் முதலிய விக்கிரககுணங்களும் சொல்லப்பட்டன. பரிகாசமொழிகளாகக் கொள்ளும்போது முதலாவதற்கு, ஒருவரும் அருகிற்சென்று கூடுதற்குங் கூடாததாயிருக்கிற கொடிய விடத்தோடு கோபத்தையுங்கொண்டு கோளிழைக்கும்வன்மையையுடைய பையுடைநாகத்தைப் படுக்கையாகக்கொண்டதன்மேலே எப்பொழுதும் படுத்துறங்குகின்றவனென்றும், இரண்டாவதற்கு, மெல்லிய சிறைகளையும் கடிய வேகத்தையும் உடையதாய் ஆகாயத்திலே அலைந்துகொண்டுதிரிகிற ஒரு பட்சியைச் சிறந்தவாகனமாகவுடையவனென்றும், மூன்றாவதற்கு அளவிடமுடியாத வயதினையுடைய கிழவனென்றும் பொருள்கொள்க. தோத்திரமாகக்கொள்ளும்போது முதலதற்கு எவ்விடத்திலும், எக்காலத்திலும், எல்லாக் குற்றேவல்களையும் அததற்குரிய வுருவமுடையனாய்ச் செய் தாநந்திக்கும் வல்லமையையுடைய அரவரசப் பெருஞ்சோதியென்னும் வெண்மை, மென்மை, மன்றல், வனப்பு, தண்மையென்னும் ஐந்திலக்கணங்களோடுங்கூடிய அகன்றுயர்ந்துள்ள பரியங்கத்திலே பள்ளிகொண்டருள்பவனென்றும், இரண்டாவதற்கு அநுகூலர்களை ரக்ஷித்தருளுகிறதற்கும், பிரதிகூலர்களைச் சிக்ஷித்தருள்கிறதற்கும், சகாயமாய்த்தேசகாலோசிதமான சகலகைங்கர்யங்களையும் செய்பவரும், சௌர்யவீர்யாதி பராக்கிரமமுடையவரும், நினைத்தமாத்திரத்திலே நினைத்தவிடங்களுக்கெல்லாம் சென்று மீளுதல் முதலிய ஊர்தியிலக்கணங்களெல்லாம் ஒருங்கே அமையப்பெற்றவருமாகிய பெரியதிருவடியை வாகனமாகவுடையவனென்றும், மூன்றாவதற்கு ஆக்கலளித்தலாதியாகிய சகலகாரியங்களுக்கும் முதற்காரணம் துணைக்காரணம் முதலிய அகிலகாரணங்களுமாய், ஆதிமத்யாந்தரகிதனாய், நித்யயௌவனமாயிருப்பவனென்றும் பொருள்கொள்க.



பரிகாசமொழிகளாகக்கொள்ளும்போது முற்கூறியபடியன்றிச் செம்பொருளாகவும் அவ்விடயம் விளங்குவது காண்க. அது பின்வருமாறு:—

முதலாவதற்கு வலியர் ஆவயின் துயில்பயில்வோன் எனக் கண்ணழித்து, கோபிகைகள் வசிக்கும் அந்த ஆய்ப்பாடியில் அவர்களின்பத்தைவிரும்பி அவர்கள்தயையை யெதிர்பார்த்து அவர்கள்கடைத்தலையிற் காத்துக்கொண்டிருப்பவனென்றும், [வல்லியர் - ஆய்ச்சியர் இடைக்குறை. ஆவயின் - அவ்விடம்.] இரண்டாவதற்கு, சொல்லும், மாசு, உக, மா, விரதம், மேயவன் - (ஏயவன்)-எனப் பதம் பிரித்து இழிவாகச்சொல்லப்படுங் குற்றங்களெல்லாம் ஒழிய மேலான நோன்பினை மேற்கொண்டிருப்பவனென்றும், மூன்றாவதற்குத் தொல்லை அம்புமான் எனப் பதச்சேதம்பண்ணிக் கடுந்துன்பத்தை விளைக்கும் வில்லோடுகூடிய கணைகளைக் கையிற்கொண்டுள்ளவன், (கணையென்பது வில்லுக்கும் உபலக்ஷணம்.) என்றும் பொருள்படுதலாம். இப்படிப் பொருள்கொண்டாலும் தோத்திரமாகக்கொள்ளும்போது முற்கூறியவாறே கூறுக. இம் மூன்றுவிசேடணங்களும் பகவத்சொரூப நிரூபணத்துக்குத் தக்க ஹேதுக்களாயிருத்தலாலே நின்பெருங்காதல் போதவும் தகுதியாகுமென்று புகழப்பட்டதாயிற்று. என்றும் மருவு தோழியரென்றது எக்காலத்தும் இணைபிரியாத ப்ரிய சகிகளை.

இப்பாட்டு, முற்பாட்டுப்போலே குறிப்பான் மற்றொருபொருள் கொடுப்பதினாலே உதாரமென்னுங் குணவணியேயாம். அன்றியும், செவிக்கினியதாய்ச்செல்லும் மெல்லிய ஓசை யமையும்படி மென்மையானவெழுத்துக்கள் பலவும், அவற்றினிடையிடையே வன்மையானவெழுத்துக்கள் சிலவுமாக அமைந்திருத்தலால் ஒழுகிசையுமாம். இதனை வடநூலார் சுகுமாரதையென்பர். இவற்றினிலக்கணங்களும் முன்னமே சொல்லப்பட்டன.

அணி:—பரிகாசத்துக்கு ஏதுவாகிய பாம்புப்படுக்கையையுடையவன், பட்சிவாகனத்தையுடையவன், கிழத்தனத்தையுடையவனென்ற நிந்தனைமொழிகளாலே சர்வாதிகத்வசூசகமாயிருக்கிற அநந்தசாயித்துவமும், கருடவாகனத்துவமும், அகில ஜகத்காரணத்துவமுமுடைய உயர்வறவுயர்ந்தவனென்ற புகழ்ச்சி அப் பழிக்கப்பட்டபொருளிடத்தே தோன்றுதலாலே வஞ்சப்புகழ்ச்சியணியாம். "பழிப்பிற் புகழ்ச்சி புகழ்ச்சியிற் பழிப்புப், புகழ்ச்சியிற் புகழ்ச்சி யெனமுப் பாலாப்,போந்தது வஞ்சப் புகழ்ச்சி யாகும்" என்பர் **சந்திராலோகநூலார்**. இதனை வடநூலார் வியாஜஸ்துதியலங்காரமென்பர். **மாறனலங்காரநூலார்** நிந்தாஸ்துதியலங்காரமென்று "இகழ்வது போன்ற வியற்கையின் வண்புகழ் - நிகழ்தர வுரைப்பது நிந்தாத் துதியே" என்று இலக்கணங்கூறுவர். (௧௫)

14. இறைவியே சிறைவண் டினந்தின முன்ற
  னெழிற்குழல் புனைநனை மலரால்
நிறைதரு நறையேய் முடியினை யுடைய
  நின்னிறை யின்னிற மருவி
உறையென நறைபெய் வைசயந் தியையு
  மொருவிமீ தெழும்பொழு தொன்றிச்
சிறைகளி னறையான் மௌலிமேற் சுழன்று
  செய்திடும் பிச்சநன் னிழலே.

பதவுரை:—இறைவியே - சர்வலோகநாயகியாரே; தினம் - ஒவ்வொரு நாளும்; உன்றன் எழில் குழல் புனை நனை மலரால் - தேவரீர் தேங்கோதையிற் சூடிக்கொடுத்த பூங்கோதையினாலே; நிறைதரு நறை ஏய் முடியினையுடைய - பரிபூர்ணமான பரிமளத்தைப்பொருந்திய மௌலியோடுகூடிய; நின் இறையின் நிறம் மருவி - தேவரீருடைய அழகியமணவாளனது திருமார்பைச் சேர்ந்து; உறையென நறைபெய் வைசயந்தியையும் ஒருவி-மழைபோல மகரந்தத்தைப்பொழிகின்ற வனமாலையையும்விட்டு; சிறைவண்டினம் - இறகுகளையுடைய வண்டின்கூட்டங்கள்; மீதெழும்பொழுது - (அவ் வழகியமணவாளனது திருமுடியை மருவிய திவ்விய பரிமளத்தை யங்கடைந் தனுபவிக்க விரும்பி யெமக்கென்று) மேலே கிளம்புங்காலையில்; ஒன்றி - ஒன்றொடொன்றுராய்ந்து; சிறைகளின் அறையால் - சிறைகளினெருக்கடியினாலே; மௌலிமேற் சுழன்று - (திருமுடியிலிறங்கி மொய்க்கவும் முடியாமல் விலகிப் போகவும் முடியாமல்) திருமுடியின் மேற்புறத்தே சுற்றிக்கொண்டேயிருத்தலாலே; பிச்சம் நன்னிழல் செய்திடும் - மயிலினிறகுகளாற்செய்த குடையினது காந்திபோலுங் காந்தியைச் செய்யாநிற்கும் எ - று. ஏ - அசை.

கருத்து:—நாய்ச்சியார் சூடிக்கொடுத்த மலர்மாலைகள் மார்பில் எப்பொழுதும் அணிந்துகொண்டிருக்கும் வனமாலையினும் நனிதவவுயர்ந்த நறுமணமுடையதென்பது. நாய்ச்சியார் திருக்குழற்கற்றையிற் சூட்டி நறுமணமூட்டிக்கொடுத்த மலர்மாலையை அன்போடு வனைந்திருத்தலாலே வனமாலையைக்காட்டிலும் மேலான திவ்விய பரிமளத்தையுடைய திருவரங்கமன்னனாரது திருமுடியையடைந்து அதனை நுகர்ந்து ஆநந்திக்கவிரும்பி அவ்வனமாலையையும் விட்டு எமக்கென்று ஒருமிக்க மேலே கிளம்பிய மதுகர நிகரங்கள் ஒன்றுக்கொன்று சிறகுகளி னெருக்கடியினாலே திருமுடியையடையவுமுடியாமல், நறுமணநுகருநசையாலே விலகி வேறிடம்புகவுமுடியாமல் அத்திருமுடியின்மேல் இடைவிடாமல் வட்டமிட்டுச் சுற்றிக்கொண்டிருத்தலாலே அவ்வாறு சுழன்றுகொண்டிருத்தல் அவ்வழகியமணவாளனது திருமுடிக்குப் பீலிக்குடைபோன்றிருக்கின்றதென்பதாம்.



விசேடக்குறிப்பு:—நனை-தேன். "நனையென் பதுவே மதமுங் கள்ளும், பூமொட்டெனவும் புகலுமுப் பெயரே" என்பது அகராதிச்சூத்திரம். நறை - வாசனை, தேன். "நறையென்பதுமது நறுநாற்றமுமாம்" என்பதும் அது. பிச்சம் - பீலிக்குடை. "பிச்சமாண் மயிரும் பீலிக் குடையும்வெண் குடையுமாகும்" மண்டலநிகண்டு. உறை - மழை. அறை - அடி. இங்கு நெருக்கத்தாலே வண்டுகள் ஒன்றுக்கொன்று சிறகுகளாலடித்துக்கொள்ளுதலைக் குறிக்கின்றது. பொருளமைதிக்கேற்றவாறு பதவுரையில் வருவித்துரைக்கப்பட்டனவெல்லாம் இசையெச்சமென்க. "அதிகாரத்தா லவாய்நிலைதன்னால், ஓர்சொற்பொருளை யுறுத்தற்பொருட்டால் - இன்னும்பலபல வேதுவினாலும், மொழிவரு வித்து முடித்தனர் கொளலே" என்பர் இலக்கணக்கொத்துடையார்.

இப்பாட்டு மூவினமும் விரவத் தொடுக்கப்பட்டிருத்தலாலே சமநிலையென்னுங் குணவணியின்பாற்படும். இதனிலக்கணமும் வடமொழிப்பெயரும் முன்னே சொல்லப்பட்டன. இதனைப் பாஞ்சாலநெறியார் அடிகடோறும் வழியெதுகையென்னும் அநுப்பிராசம் பெரும்பாலும் வந்திருத்தலாலே சொல்லின்பமென்னுங் குணவணியென்பர்.

அணி:—அழகியமணவாளன் திருமுடிக்குமேலே மண்டலாகாரமாக வண்டினங்கள் சுழன்றுகொண்டிருத்தலாகிய உபமேயத்திலே பீலிக்குடையாகிய உபமானத்தின்றன்மை ஆரோபிக்கப்பட்டிருத்தலால், இப்பாட்டு பதப்பொருட்காட்சியணியாம். "ஒன்ற னியன்மற் றொன்றிடை யேற்றிடல், பதப்பொரு ளென்னப் பாத்தனர் புலவர்" என்பர் சந்திராலோகநூலார். வடநூலார் பதார்த்தவிருத்திநிதர்சனாலங்காரமென்பர். (கச)

15. நறுமணம் புணர்ந்து நாளுநெஞ் சமர்ந்து
  நயப்புறு செம்மை மேவுற்றும்
உறுவதற் குரிய குணமமைந் திருந்து
  மோவரும் மெல்லியல் வாய்ந்தும்
மறுவறு வைச யந்திதென் னரங்க
  மன்னனார் மௌலிசேர் நின்னேர்
பெறுகுழற் கோதை யாற்றிருக் கோதாய்
  பெரிதுந்தாழ்த் திடப்படு மன்றே.

**பதவுரை:**—கோதாய் - கோதைசூடிக்கொடுத்தருள்நாய்ச்சியாரே!; தென்னரங்கமன்னனார் மௌலிசேர் - அழகிய அரங்கநாயகரது திருமுடியை யடைந்திருக்கிற; நின் ஏர்பெறு குழற் கோதையால் - தேவரீருடைய பூங் குழற்கோதையினாலே; மறு அறு வைசயந்தி-குற்றமற்ற வனமாலிகையென் னும் பூங்கோதை; நறு மணம் புணர்ந்தும் - (1) நன்மையான வதுவையயர்ந் திருந்தும்; (2) நல்ல வாசனையையமைந்திருந்தும்; நாளும் - எப்பொழுதும்; நெஞ்சமர்ந்தும் - (1) எம்பெருமானது இதயத்துப் பொருந்தியிருந்தும்; (2) திருமார்பிலமைந்திருந்தும்; நயப்புறு - விரும்புதற்குக்காரணமாகிய; செம்மை மேவுற்றும் - (1) நல்லொழுக்கத்தைப் பெற்றிருந்தும்; (2) செவ்விய தளங்களை யியைந்திருந்தும்; உறுவதற்குரிய - பொருந்தத்தகுதியான; குணம் அமைந்திருந்தும்; (1) நற்குணங்களெல்லாம் அமைந்திருந்தும்; (2) நாரோடு கூடியிருந்தும்; ஓவு அரும் - ஒருகாலத்தும் மாறாத; மெல்லியல் வாய்ந்தும் - (1) சௌகுமார்யத்தைப் பெற்றிருந்தும்; (2) மென்மைத்தன்மையை மேவி யிருந்தும்; பெரிதுந் தாழ்த்திடப்படும் - (1) மிகவுங் கீழாகச்செய்யப்படும்; (2) மிகவுந்தாழ்வாகச்செய்யப்படுகின்றது; அன்றே - அல்லவா எ-று.

**கருத்து:**—இயல்பாகவே குற்றமற்ற வனமாலிகையென்னுந் தேங் கோதை நறுமணம்புணர்தன்முதலிய நற்குணங்களெல்லாம் நண்ணி யிருந்தும் திருவரங்கமன்னனாரது திருமுடியையடைந்துள்ள தேவரீர்தேங் குழற்பூங்கோதையினாலே கீழாகச்செய்யப்படுமென்பதாம். சூடிக்கொடுத்த மாலை எம்பெருமானால் சிரசாவகிக்கப்பட்டதென்பதுமாம்.

**விசேடக்குறிப்பு:**-தாழ்த்திடப்படுமென்றது எம்பெருமான் திருமுடியிற் புனைந்துள்ள சூடிக்கொடுத்தமாலைக்குத் திருமார்பிலணிந்திருக்கிற வனமாலை தாழ்வான இடத்திலுள்ளதை. இது கவிசமத்காரம். உம்மை யாவும் உயர்வு சிறப்புப்பொருளன. அன்றே - பலரறிதேற்றம். பெரிது என்பதன்பின் ஓ ரும்மை வருவித்துப் பொருள்கொள்ளப்பட்டது. உயர்வுசிறப்பும்மையோடு கூடிய வினையெச்சங்களெல்லாம், தாழ்த்திடப்படும் என்னும் முற்றுவினை யைக்கொண்டு முடிந்தன. வைசயந்தி கோதை யென்னும்பெயர்கள் மாலைகளைக் குறிப்பதன்றி மாதர்கள்பெயர்களாகவும் வழங்கப்படுதலாலும், தாழ்த்திடப் படுமென்னுஞ் செய்யுமென்னும் வினைமுற்றும் அஃறிணையொன்றன்பாலாக வும் உயர்திணைப்பெண்பாலாகவும் பொருள்கொள்ளத்தக்கதாதலாலும், தொனியாக வேறொரு பொருள்படுவதற்கேற்ப வினையெச்சங்களுக்கெல்லாம் இரண்டுபொருண்மை யெடுத்துரைக்கப்பட்டன. எல் இயல்வாய்ந்தும் எனப் பிரித்துக் காந்தியையும் இலக்கணங்களையும் அமைந்தும் என்றும், செம்மை மேவுற்றும் என்பதற்கு இலக்கணமமைந்திருந்தும் என்றுஞ் சொல்லலாம்.



இப்பாட்டுக் குறிப்பால் மற்றொருபொருள் தோன்றும்படி அமைந் திருத்தலாலே உதாரமென்னுங் குணவணியாம். இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.

**அணி:**—இங்குச்சொல்லப்படுகின்ற மாலையின் வர்ணனையாகிய புகழ் பொருட்செய்தியிலே மிகவுயர்வுபெற்றிருக்கிற ஒருபெண்ணினாலே நற்குண நற்செய்கையையுடைய மற்றொருபெண் தாழ்த்திடப்படுமென்ற அல்பொருட் செய்தி தோன்றுதலாலே இப்பாட்டுச் சுருங்கச்சொலலணியாம். "அடை மொழி யொப்புமை யாற்றலி னல்பொருட், செய்தி விளங்கப் புகழ்பொருட் செய்தியைச், சிலேடை பொதுவடை யெனுமிரு திறத்தினும், தோன்றக் கூறல் சுருங்கச் சொலலே" என்பர் சந்திராலோகநூலார். இதனை வடநூலார் சமாசோக்தியென்பர். இது சிலேடையோடு கூடிவந்தது. சிலேடையில்லா மலும் வரும். (கரு)

16. வயங்குநின் மௌலி வனைந்தருண் மாலை
மான்முடி வகித்திடு மளவில்
இயங்கதன் மதுவை யிச்சையின் படிதே
னினங்களி கொண்டுகூட் டுண்டு
நயங்குல விடுமின் குரலின வாகி
நம்பெரு மாட்டியே நின்மின்
முயங்குமுன் றிலிற்செய் மன்றலின் முழங்கும்
முதன்மைசேர் முழவென முழங்கும்.

**பதவுரை:**—நம்பெருமாட்டியே - நம்பெருமாளது திவ்வியமகிஷியாரே!; தேன் இனம் - மதுகரநிகரங்கள்; வயங்கும் நின் மவுலி வனைந்தருள் மாலை- வயங்குகின்ற தேவரீர் திருக்குழற்கற்றையிற் சூடிக்கொடுத்த திருமாலையை; மால் - நம்பெருமாள்; முடிவகித்திடும் அளவில் - தம் திருவபிஷேகத்தில் அணிந்துகொண்டபொழுது; இயங்கு அதன் மதுவை - பெருகிவருகின்ற அந் தத்திருமாலையின் தேன்பெருக்கை; இச்சையின்படி - இட்டப்பிரகாரம்; கூட் டுண்டு - கொள்ளைகொண்டுண்டு; அல்லது கூட்டமாகக் கூடியிருந்து குடித்து; களிகொண்டு - களிப்படைந்து; நயங் குலவிடும் - இன்பம் விளைக்கின்ற; இனிமைக்குரலினவாகி-இனிய இசையையுடையனவாய்; நின் மின்முயங்கும்- தேவரீரது ஒளிதழையும்; முன்றிலில் - முத்துடைத்தாமநிரைதாழ்ந்த பந்த லில்; செய் மன்றலில் - கண்டருளுகின்ற திருக்கலியாணமகோற்சவத்தில்; முழங்கும் - ஒலிக்கின்ற; முதன்மைசேர் - உத்தமமாகிய; முழவென - மங்கல ஒலித்தைப்போல; முழங்கும் - ஒலிக்கும் எ-று.

கருத்து:—நாய்ச்சியார் சூடிக்கொடுத்து மன்னனூர் திருமுடியிற் சூடிக்கொண்டிருக்கும் திருமாலைகளிலிருந்து பெருகிவருகிற மதுவைப் பானம் பண்ணிக் களித்து அதனாலே மதுரமானதொனியையுடைய மதுகரங்கள், மன்றல்முன்றிலில் முழங்கும் முழவம்போல முழங்குமென்பதாம். இதனால் நாய்ச்சியார்சூடிக்கொடுத்து மன்னனூர் திருமுடியிற் சூடிக்கொண்டிருக்கிற மலர்கள் தத்தமிடத்திலிருக்கும்பொழுதிற்காட்டிலும் மிகவுஞ் செழிப்புற்று வாசனைமிக்கு அதிகமாகத் தேனைப்பொழிதலாகிய பெருமையையுடைமை சூசிக்கப்பட்டது. அன்றியும், வண்டினங்களும் அம்மலர்களினின்றும் மிகுதியாகப்பெருகிவருகின்ற மதுவைக் கூட்டுண்டு முன்னிலும் இனிமையான குரலினைப்பெற்றுக்களிப்போடுமுழங்குகின்றனவென்பதும் குறிப்பிக்கப்பட்டது.

விசேடக்குறிப்பு:—மால் என்னும் திருநாமத்துக்கு அடியார்களை ஆட்கொண்டருளுவதில் மிக்க ஆர்வமுடையவனென்றும், மாயையையுடையவனென்றும், திருமாமகளிடத்தில் மிக்க மோகத்தையுடையவனென்றும், கருமையான திருமேனியையுடையவனென்றும், பெருமையையுடையவனென்றும், எவரினும் உயர்ந்தோனென்றும் பலபொருள்கூறுவர். இங்கு முதலாவதாகச்சொல்லப்பட்ட பொருளே கொள்க. கூட்டுண்டல் என்பதை வடநூலார் சகபானகேளியென்பர். சபீதி, துல்லியபானமென்றுஞ் சொல்லுகின்றனர். அதாவது உத்யானவனம்முதலிய மனதுக்கினிமைவாய்ந்த இடங்களில் வந்து புத்திரர்மித்திரர்களுடன் கூடியிருந்துண்ணல்; "புலவர்களியமுதொழுகு புதுமொழிகூட் டுணத்தமிழாற் புனைதல்செய்தான்" என்பர் நைடதச்சிறப்புப்பாயிரத்தார். மின்முயங்குமுன்றிலென்றதனால் பொன்னினும் மணியினும் புனைந்ததென்க.

கவியாற்கருதப்படும்பொருள் விரைவிற் புலப்படுமாறு விளக்குதற்கு வேண்டும், சொற்களையுடையதாயிருத்தலால் இப்பாட்டு உய்த்தலில் பொருண்மையென்னுங் குணவணியின்பாற்படும். "கருதிய பொருளைத் தெரிவுறவிரித்தற்,குரிய சொல் லுடைய துய்த்தலில் பொருண்மை" என்பர் தண்டியாசிரியர். இதனை வடநூலார் அர்த்தவியக்தி என்பர். திருவரங்கமன்னனூர் திருமுடிமேற்புனைந்திருக்கிற நாய்ச்சியார்சூடிக்கொடுத்த மாலைகளிலிருக்கிற மலர்கள், தத்தம் பிறப்பிடங்களிலிருக்கும்பொழுதினும், மிகவுஞ் செழிப்புற்று மிகுதியாகத் தேனைப் பொழிகின்றதென்றும், அத்தேனையுண்ணுதலாலே வண்டினங்களுக்கு இயல்பாயமைந்த இன்குரலைக்காட்டினும் நயங்குலவிடுமின்குரலும், எப்பொழுதும் முழங்கிக்கொண்டிருக்கைக்கேதுவான மிக்ககளிப்பும் உண்டாயினவெனக் குறிப்பாற் றோன்றுதலாலே உதாரமென்னுங் குணவணியுமாம். இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது.



வேறு.

1534 சூல மொன்றதன் பின்னவ னெடுத்தனன் சுவற்கத்தார்
நீல கண்டனென் றயிர்த்தனர் நீணிற னிவனென்றார்
கால னென்றன ரெயிறிலை யென்றனர் கடுங்காளி
கோலமானுருக்கொண்டதென்றேதிடங்குறிக்கொண்டார்.

1535 கொற்ற வேழமுங் கொணர்ந்ததோ ரெழுவினைக் கொடுங்கோன்மை
யுற்ற காலதண் டிஃதெனப் பற்றிய தொருகையாற்
சுற்று கின்றது கறங்கென வரக்கருந் துணுக்குற்றார்
வெற்றி யெவ்விடத் தாமெனத் துணிகிலர் விண்ணோரும். ()

1536 கோள ரிக்குலங் களுக்கிட ரிழைத்திடுங் கொலைவேட
னீள முத்தலைச் சூலம தேவனு நெடுவேழ
நாள வான் [1] கையா லெழுவினை யேவனு நடுப்பட்டே
தூள மாயது சுழற்றிய வெழுவெனச் சுடர்ச்சூலம். (கஎ)

1537 காய்சி னத்தெறி யடுபடை யொடிபடல் காணேமென்
றூசி யன்றுள தானவ ரமர்வர மாக்கண்கள்
கூசி மூடினர் தூசினி லாகையாற் கொடிப்போரைத்
தூசி யென்பதும் யோகமென் றுணர்ந்தனர் துறவோரே. ()

1538 மீண்டு மொண்சுடர்ச் சூலமொன் றெடுத்தவன் விறல்வேழ
மாண்ட தாமென மத்தகத் தழுத்தலும் வலக்கோட்டிற்
பூண்ட பூட்கையாற் பறித்தெதிர் தொடப்புறக் கொடைவீழ்ந்த
தாண்ட கூளிகூழ் காளிமுன் கடுஞ்சுரத் தறுமன்னே. (க௯)

1539 உழவு பற்பல வாயிழைத் திட்டவொண் பொருளோர்கா
ளிழவு கூரினு மிழைத்தவர்க் கெய்துமென் பதுகாட்டு
மழவ னேச்சிய வெஃகமா தியமறு விலராமக்
கிழவர் மாட்டினு நீலிமாட் டினுமணு கியவாழ்வே. (உ0)

1540 சூலம் வன்சுரத் தெய்துமுன் சூலிமுன் சுற்றத்தாற்
காலம் பார்த்திரு கழலினிற் கடிமலர் பலசூட்டி
நூல்ப யின்றுள பொருளுரை பலபல நுவல்போழ்திற்
சீல முற்றவள் கருணையா னேக்குமத் திறங்கண்டே. (உக)

[பி-ம்] [1] கையி. சா.

1541 பாடல் சார்ந்துள பாலையா மென்னுமப் பண்பாடி
யாட லுட்டுடி யென்னுமக் கூத்தல கைகள்யாவுங்
கூடல் சார்ந்துறு துடியது குளிறவே கூண்டாடிச்
சூட கக்கரம் [1] பழுப்புடை செறிதுணங் கையுமாடி. (உஉ)

1542 முன்னை நாளையி னின்றொடு முாணினர் முரட்டாக்கை
யன்னை யேயெம [2] தடும்பசிக் களித்தனை யவைபோய
பின்னை நாளான் பெரும்பசிக் களித்தன பெரிதுண்டால்
என்னைபின்னையொன்றெய்துவதின்றியீங்கெஞ்ஞான்றும்.

1543 என்பு நாடியு மன்றியே தசையில்யாக் கையினோடுந்
துன்ப முற்றனர் துப்புர வேதுவாய்த் துயர்கூர்ந்துந்
தென்பு லத்தவ னிடத்தியா மணுகுதல் செய்யேமால்
அன்பு கூர்ந்தெமக் குணவுற வுளவெனி லருளென்ன. ()

1544 உண்டெ னுந்திற [3] முற்றவத் துணரகின் றனளாகக்
கண்டு கண்களித் திடலொடு முயிர்களித் தனவாகிப்
பண்டு வற்றிய யாக்கைபூ ரித்தவள் பதம்பேணி
யண்ட மேற்குதித் தாடின பாடின வவைதாமே. (உ௩)

அஞ்சுந் தொடர்.

வேறு.

1545 டுெத்தா னதன்பி னொருகே டகத்தை
யெழில்வாம பாணி யதனாற்
றெடுத்தான் வலக்கை வடிவா ளசைத்த
தொழிலோடு சாரி பலவு
முடுத்தான் வளைத்த மதிமண் டலத்தி
னொருபா லுயர்த்து மதியைத்
தடுத்தான் விசும்பி னதன்முன் னெதிர்ந்த
தனிஞாயி றென்றி தெனவே. (உ௬)

---

[பி-ம்.] [1] பழுப்புடைச், சா. [2] தருப்பசிக். சா. [3] முற்றலத் துணர்த்தினளாகக், ச.



1546 பணித்தா னதன்பின் னடல்வாளி னோடு
கிடுகைப் பணித்த நிலைகண்
டணித்தா யிடங்கொள் குருதிப் பெருக்கு
ளமர்பாறை கொம்பர் தனையே
தணித்தாட லோடு கிளையா நிமிர்த்த
தாரைப் பணைக்கை யதனாற்
பிணித்தாத வன்செல் வெளியிற் சுழற்று
பிடுற்று நின்ற மதமா. (உ௭)

1547 எருவைக் களத்து ளிகல்வேடன் முந்தி
யெதிர்கேட கத்தொ டெதிர்சார்
செருவிற் கமைந்த படல்பாறை யென்று
சேமக் களத்து ளடலும்
பருதித் தகட்டு வடிவாளி னோடு
பற்றிச் செருச்செய் தொழிலுக்
கொருகைக் கிதத்த வடிவாளி தென்ன
வொருதண்டின் வாளி வருமே. (உ௮)

இரண்டுந் தொடர்.

1548 கதிர்மண்ட லத்தை நிகரென்ப தாய
கனவட்ட நீடு கிடுகு
மதிமண்ட லத்தை யணவும் படிக்கு
வடிவங்கொள் வாளு மதியா
தெதிர்கின்ற தாலிம் மதமாவி னுவி
யினியுண்க வுண்க வெனவே
விதிகொண்டு வந்து தருகின்ற தின்று
வெல்கின்ற தன்மை யெனவே. (உ௯)

1549 கிடுகாக நட்ட தொருபாறை தண்டு
கிளர்வா ளெனக்கொ ணிலையான்
முடுகா திருப்ப தினிவென்று தட்டி
முனைவாளின் முட்டு மளவி

னடுபாறை கைக்கொண் மதமாவு முட்ட
நடுவொன் றிரண்டு கிடுகிற்
கடுகாய தோடு மணுவாய தொன்று
கண்காண லாய திலையே. (௩0)

இரண்டுந் தொடர்.

வேறு.

1550 மடங்கொண் மறவே டுவனதன்பின்
வலக்கை வடிவா ளிணைவிதிர்த்துக்
கடங்கொள் கரடா சலப்பணைக்கை
கண்டஞ் செயலிற் கரிமருப்பால்
இடங்கொ ளவன்மார் பிணைத்துளைப்ப
விடும்பை யுடல்கள் கிடந்தவுயிர்
நடந்த விருநா லெனப்புரிந்த
நவைதீ ருடம்பி னள்ளிடையே. (௩௧)

1551 அக்கா லையினி னிசாசரர்கா
லனையா தியராய் மூவரெனு
மிக்கார் மதவெற் பினமுதலாம்
விறன்மா வொருமூன்றையு மறைகூ
யெக்கா லமதா மெம்மொடிகற்
கெதிர்நா ளெனலுஞ் செருக்களத்துட்
புக்கார் கலியு மலையுமெனப்
பூசல் விளைத்த தினிப்புகல்வாம். (௩௨)

வேறு.

1552 பொற்பத்தி கொண்ட வுடலா னிறந்த
பொழுதண்ட ரண்ட றுகர்வா
னுற்பத்தி கொண்ட கனலாதி யென்ன
யூகங்கண் மும்மை யெனலாய்
விற்பற்றி னான்முன் வாள்பற்றி னான்முன்
வேல்பற்றி னான்முன் வியல்கூர்
கற்பற்றி நீடு முசலத்தி னோடு
கதைபற்றி நிற்கு மவையே. (௩௩)



வேறு.

53 நெற்றிக் கையி னிசாசரர் கால னெடுமுற்க
நெற்றிக் கைவன றுகர்மத மலையே நின்னின்னி
னெற்றிக் கயினிட மிகலென வஃதவ னேர்செல்லா
நெற்றிக் கயில்கொடி கண்முட னணுகின நிணமுண்பான்.

வேறு.

54 வடவையின் முகமே யென்னொடுங் கெதிரின்
மருப்பறு மருப்பற நினது
வடவையின் முகமா நின்முக மென்று
மனுகுல காலனு வடங்க
வடவையி [1]னினங்கூர் வீழ்புரை கரத்தால்
வருகவென் றழைப்பவ னடனு
வடவையின் மருப்பி னொடுகா நிமிர்த்து
வலங்கையி [2]னெதிர்ந்ததவ் வடவை. (௩

55 இடங்கையி லையதா யிருப்பவுஞ் சுடுகர்
டிடங்கொளா நடங்கொள்வான் சீற்றத்
திடங்கையி னின்ற தானவர் கால
னென்முனீ யெதிரினின் னுடல்பா
ரிடங்கையா துண்ண வுணவதாக் குவதோ
டேற்றமுங் கருங்கணுங் கருமை
யிடங்கய மலரா னவளுமுண் பளெனு
விடங்கையிற் செலுமடி யேறே. (௩

556 நிணங்குலாங் கவட்டு நெட்டிலைக் குலிச
நிசாசரர் காலனேங் துதலுங்
கணங்குலா விமையோ ரிரிந்துநே மியையே
கைக்கொளப் பொருமதப் பொருப்பு
மணங்குலாங் களத்து ளணங்குமாங் கணங்க
வாங்கொரு வயிரவான் கதையை
யிணங்கவே பணைக்கை யினிற்கொள மண்ணோ
ரேறினர் மயேந்திரப் பொருப்பே. (௩

[பி-ம்.] [1] னங்கூர். சா. [2]. னெதிர்த்ததவ். சு.

1557 கூற்றமும் பனிக்கு மனுகுலக் கூற்றங்
கொழுநிணக் குருதியுட் குளிக்கும்
வேற்றடக் கையொடும் வினைவலும் வடவா
முகமெனும் வேழமே தண்டஞ்
சீற்றமொன் றியதாற் பிணர்புணர் புழைய
திரண்டநோன் பனைக்கையி னெவரு
மாற்றரும் வயிர முசலமொன் றேந்த
வாசவன் மதிமருண் டனனே. (௩௮)

1558 சிகரமே தண்ட மெனக்கவ டுபடு
திண்புயத் தானவர் கூற்ற
மகரகே தனத்தான் பொடியெழ விழித்தான்
வன்கணன் சூலமொன் றேந்தச்
சகரமே லையுளா மிலங்கையுட் சயிலந்
தனைக்கையிற் கிளைத்தெதிர் கருதி
யிகல்விளைப் பதற்கன் றமைந்தசூ லமதொன்
றேந்திய தாங்கிடி யேறே. (௩௯)

1559 ஏறுபோன் றிகல்செய் நிசாசரர் கூற்ற
மெறும்வலிப் பொருமதப் பொருப்பை
மாறுகொண் டுருளத் துரீஇய பல் சிகைய
வச்சிரப் படையினை யேவ
ஆறுமான் மதமாக் கதையையு மெதிர்நின்
றேரச்சனு முடனெதிர்ந் திரண்டு
நூறுகோ டியதா கலிற்கதை யினையு
நூறுகோ டியதெனத் தகுமே. (௪0)

1560 கொற்றமேய் சதகோ டியதெனும் படையுங்
குஞ்சர மெறிந்தநோன் கதையு
மெற்றுகா லையினி லீடுபட் டிறந்த
தெற்றெனி லினியநூல் பலவுங்
கற்றுளார் கவியி னலமிலார் கல்வி
நனியிலார் கவியுளார் கழகத்
துற்றகா லையினி லொருவருக் கொருவ
ருடைந்ததெற் றற்றெனத் தகுமே. (௪௧)



1561 குலத்துளா னவருங் கூற்றமென் றயிர்க்கு
நிசாசரர் கூற்றுவன் பின்பப்
புலத்துளாய்ச் சினவு பொருமதப் பொருப்பின்
புழையின்மத் தகத்தொர்கை வேலைச்
சலத்தினு லழுத்தப் பறித்ததை யவன்மத்
தகத்துமால் யானையு மழுத்த
நிலத்துளார் நெற்றிக் கைப்படை யெனவே
நிகழ்த்தநிச் சயித்தன ரதையே. (௪௨)

1562 மன்பதைக் கூற்ற மெனுமொரு நாமம்
வளர்த்துளான் வடித்தகூர் வேலை
முன்பதைத் திகலுக் கெதிர்தரு வடவா
முகத்தின்மே லெறிதர வஃதக்
கொன்பயில் முசலத் தினையவன் முகத்திற்
குறித்தெறி தலுங்கரத் தேற்பத்
தன்படை தனுது தனுதெனு முறைபோய்த்
தட்டுமா றினவிரு வையுமே. (௪௩)

1563 வழுவிலாக் குகன்கைச் சுடர்வடி வேலை
வழங்கியே முசலமென் பதனை
யெழுவுறழ் திணிதோள் வேடுவன் கைக்கொண்
டின்புறல் பரவையுட் பிறந்த
முழுமணி கொடுத்தாங் கதனினும் பிறங்கு
முருட்டுடற் பூவிராய் வெயில்போம்
பொழுதெனும் பகற்பின் மாறிய பரதர்
புறக்கடை வாணிகம் பொருவும். (௪௪)

1564 மின்கதிர் வடிவேற் படையினை மதமா
மீளவே விடுப்பவே டுவனு
முன்புறு முசலந் தனையெதிர் விடுப்ப
முந்திய தவனிட மொய்ம்பை
யென்பறத் துளைத்துப் போனது முசல
மெதிர்ந்தடித் ததுபனைக் கையினைத்
தன்கையிற் படையே தனக்குவன் பகையாய்ச்
சமைந்ததென் றிசைத்தன ரிமையோர். (௪௫)

1565 ஈங்கிவ ரிவைசெய் திறமெலாங் கண்ட
விடங்கையிற் றுனவர் காலன்
றுங்கிய சூலப் படையினைச் சமர்க்குச்
சமையிடி யேற்றின்மே லேவத்
தூங்கலுந் தறுதி தூங்குழக் கையினுற்
சூலவன் படையினை யேவ
வாங்கவை விலங்கி யேகலு மமைந்த
ததன்பனைக் கையுமவன் கையுமே. (சசு)

1566 கூரிய பிறைக்கோட் டோங்கல்வன் படையுங்
கொடுந்தொழில் வேடுவன் படையும்
வீரியம் விளைப்ப வாகியும் விலங்கி
மேயவக் கரங்களி னடைதல்
ஒருயிர் வடிவம் பலவெடுத் துறைநா
ளுறுபகை யுடல்குறைப் பதலாற்
பேருரு வதனைக் குறைத்திடா தெனுமப்
பெற்றியே யுள்ளுறுத் தினவே. (சஎ)

1567 அப்படை களினு லடிக்கடி குத்தி
யக்தியத் தெதிரெதி ரேவத்
துப்புடை யவன்மார் பினையிடப் புயத்தைத்
தோடுடைச் செவியையுந் துளைத்த
திப்புறத் திபக்கை யிடச்செவி பின்னுற்
றிடுகளிற் றையுந்துளைத் ததனுன்
முப்புரங் களினைச் சூலமே யடுதன்
முறையெனுந் திடனுணர்த்தியதே. (சஅ)

வேறு.

1568 இன்னண நிகழ்ந்த காலை யெறுழ்வலி படைத்த கொற்றப்
பின்னணி யெனவே நின்ற பீடுடை மூவர் பின்னுங்
கொன்னுனைப் பகழி சாபங் குருதிவாள் கடகந் தட்டு
வென்னிடா தவனைவென்காண்வே தினத்திடிப்பர்மாதோ.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின்

**1935-ஆம் வரு அக்டோபர்மாத வரவு செலவு கணக்கு.**

| விவரம். | வரவு 1935 அக்டோபர் | 1934 அக்டோபர் | விவரம் | செலவு 1935 அக்டோபர் | 1934 அக்டோபர் |
|---|---|---|---|---|---|
| I General Section: | | | I General Section: | | |
| (1) நன்கொடைவகையில் வரவு | 26 8 3 | | (1) சங்கம் மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 123 8 ... | |
| | | | (2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 140 ... ... | |
| (2) மாதசசந்தாவகையில் வரவு ... | 70 ... ... | | (3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது. ... | 168 5 8 | |
| | | | (4) Stationery contingencies வகையிற்செலவு ... | 5 4 ... | |
| (3) சங்கக்காலியிடத்துக்கு மாதவாடகை வரவு ... | 30 ... ... | | (5) பாண்டியன் புத்தகசாலைக்கு வரும் பத்திரிகைக்குச் சந்தா செல்லாக்கியது. ... | 6 9 ... | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (4) Miscellaneous வரவு ... | 4 | 7 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 130 | 15 | 3 | 90 | 4 | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (6) ஆபீஸிற்கு Furniture வாங்கிய வகையிற் செலவு ... | 2 | 8 | ... | | | |
| (7) தபால், தந்திவகையிற்செலவு | 3 | ... | ... | | | |
| (8) சரஸ்வதிபூஜை சம்பந்தமாகச் செலவு ... | 9 | 13 | 5 | | | |
| மொத்தம் ரூ ... | 459 | ... | 1 | 745 | 10 | 3 |

II Editorial Section:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) செந்தமிழ்ப்பத்திரிகைக்குச் சந்தாவகையில் வரவு ... | 4 | ... | ... | | | |
| (2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் விற்றவகையில் வரவு ... | 64 | 13 | ... | | | |
| (3) செந்தமிழ்ப் பழையபிரதிகள் விற்றவகையில் வரவு. ... | ... | 8 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 69 | 5 | ... | 58 | 12 | ... |

II Editorial Section:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) ஷை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 85 | ... | ... | | | |
| (2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாக ஸ்டேஷனெரி கன்டின்ஜன்ஸி வகையிற் செலவு ... | 4 | 6 | 9 | | | |
| (3) ஷை சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலி வகையிற் செலவு ... | 73 | ... | ... | | | |
| (4) தபால், தந்திவகையிற் செலவு. ... | 7 | 8 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 169 | 14 | 9 | 185 | 6 | |

III Press Section:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) அச்சுக்கூலிவகையில் வரவு. | 70 | ... | ... | | | |
| (2) பைண்டிங் கூலிவகையில் வரவு ... | 3 | ... | ... | | | |
| மொத்தம் ரூ ... | 73 | ... | ... | 53 | 8 | ... |

III Press Section:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) அச்சாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 40 | 1 | 1 | | | |
| (2) ஷை ஆபீஸ் Stationery contingencies வகையிற் செலவு. | 6 | 9 | 9 | | | |
| மொத்தம் ரூ. ... | 46 | 10 | 10 | 38 | 7 | 11 |

| விவரம் | 1935 ரூ. | அ. | பை. | 1934 ரூ. | அ. | பை. | விவரம் | 1935 ரூ. | அ. | பை. | 1934 ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரூ ... | 273 | 4 | 3 | 202 | 8 | ... | ஆக மொத்தம் செலவு ரூ ... | 675 | 9 | 8 | 969 | 8 | 4 |
| மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்பு ரூ ... | 948 | 6 | 1 | 5711 | 6 | 9 | மாத முடிவில் மீதி இருப்பு ரூ ... | * 546 | ... | 8 | 4944 | 6 | 5 |
| ஆகமொத்தம் ரூ ... | 1221 | 10 | 4 | 5913 | 14 | 9 | ஆகமொத்தம் ரூ ... | 1221 | 10 | 4 | 5913 | 14 | 9 |

*By M. R. C. C. Bank
Pass Book Rs. 50- 0- 0
Cash on hand Rs. 496- 0- 8
546- 0- 8

குறிப்பு:—மேலேகண்ட விவரப்படி இம்மாதமுடிவில் மீதி இருப்பு ரூ. 546-0-8 தவிர, மதுரை M. R. C. C. Bankல் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள முதல்கள் (1) ரூ. 25011-5-0; (2) ரூ. 1050-0-0; மதுரையிலுள்ள இந்தியன்பாங்கில் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள முதல்கள் (1) ரூ. 10000; (2) ரூ. 10000; (3) ரூ. 5000; காரைக்குடி கா.சு.கா.ஸ்ரீ அ. அ. ராம. கார்வணச்செட்டியாரவர்களின் ரெக்கடன் ஆப்மென் கடையில் வட்டிக்குக் கொடுக்கப்பட்டுள்ள முதலும் ரூ. 1200 ஆகும்.

Audited and found correct,
V. S. RAMASWAMI, AUDITOR, 16–11–'35.

LAKSHMINARAYANAN,
MANAGER, 5–11–'35.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

## 1935-ஆம்வருஷ நவம்பர்மாத வரவு செலவு கணக்கு.

| விவரம் | வரவு 1935 நவம்பர் | | | 1934 நவம்பர் | | | விவரம் | செலவு 1935 நவம்பர் | | | 1934 நவம்பர் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| I GENERAL SECTION : | | | | | | | I GENERAL SECTION : | | | | | | |
| | | | | | | | (1) சங்கம்மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 123 | 8 | ... | | | |
| (1) மாதச்சந்தாவகையில் வரவு... | 70 | ... | ... | | | | (2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 140 | ... | ... | | | |
| (2) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகக்கட்டணத்தொகை வரவு | 3 | ... | ... | | | | (3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது. ... | 133 | 13 | 11 | | | |
| (3) சங்கக் காலியிடத்துக்கு மாத வாடகை வரவு ... | 30 | ... | ... | | | | (4) Stationery, contingencies வகையிற் செலவு ... | 3 | 6 | 3 | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (4) Miscellaneous வரவு ... | ... | 9 | ... | | | | (5) சங்கமாபீசு சில்லறை வேலைகள் சம்பந்தமாக பைண்டிங்கூலி செல்லாக்கியது. | 3 | 2 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 103 | 9 | ... | 491 | 1 | 7 | மொத்தம் ரூ | 403 | 14 | 2 | 993 | 4 | 4 |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| II EDITORIAL SECTION : | | | | | | | II EDITORIAL SECTION: | | | | | | |
| (1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தாவகையில் வரவு. | 165 | 9 | ... | | | | (1) ஷை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 50 | ... | ... | | | |
| (2) 'செந்தமிழ்'ப்பத்திரிகைச் சந்தா வகையில் வரவு ... | 82 | 10 | ... | | | | (2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் அச்சிடும்சம்பந்தமாக ஸ்டேஷனெரி கண்டின்ஜன்ஸிவகையிற் செலவு. ... | ... | 4 | 6 | | | |
| (3) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் விற்றவகையில் வரவு ... | 64 | ... | ... | | | | (3) ஷை சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டிங்கூலிவகையிற் செலவு. | 82 | 14 | ... | | | |
| (4) செந்தமிழ்ப் பழையபிரதிகள் விற்றவகையில் வரவு ... | ... | 8 | ... | | | | (4) தபால் தந்திவகையிற் செலவு | 21 | ... | ... | | | |
| மொத்தம் ரூ ... | 312 | 11 | ... | 271 | ... | ... | மொத்தம் ரூ ... | 154 | 2 | 6 | 154 | 7 | 9 |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| III PRESS SECTION : | | | | | | | III PRESS SECTION : | | | | | | |
| (1) அச்சுக்கூலிவகையில் வரவு | 63 | ... | ... | | | | (1) அச்சாபீஸ்சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 39 | 8 | ... | | | |
| (2) பைண்டிங்கூலிவகையில் வரவு ... | 18 | ... | ... | | | | (2) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு. | 5 | 11 | 3 | | | |
| மொத்தம் ரூ ... | 81 | ... | ... | 91 | 4 | ... | மொத்தம் ரூ ... | 45 | 3 | 3 | 87 | 15 | 6 |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரு. ... | 497 | 4 | ... | 853 | 5 | 7 | ஆக மொத்தம் செலவு ரு. | 603 | 3 | 11 | 1185 | 11 | 7 |
| மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்பு ரு. ... | 546 | ... | 8 | 4944 | 6 | 5 | மாதமுடிவில் மீதியிருப்பு ரூ ... | * 440 | ... | 9 | 4612 | ... | 5 |
| ஆகமொத்தம் ரு. ... | 1043 | 4 | 8 | 5797 | 12 | ... | ஆக மொத்தம் ரூ ... | 1043 | 4 | 8 | 5797 | 12 | ... |

*By M. R. C. C. Bank
Pass Bk. Rs. 50- 0- 0

Cash on hand Rs. 390- 0- 9

440- 0- 9

குறிப்பு:—மேலேகண்ட விவரப்படி இம்மாதமுடிவில் மீதி இருப்பு ரு. 440—0—9 தவிர, மதுரை M. R. C. C. Bankல் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள முதல்கள் (1) ரு. 25011—5—0, (2) ரு. 1050—0—0; மதுரையிலுள்ள இந்தியன் பாங்கில் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள முதல்கள் (1) ரு. 10000, (2) ரு. 10000, (3) ரு. 5000, [illegible] வட்டிக்குக் கொடுக்கப்பட்டுள்ள முதலும் ரு. 1200 ஆகும்.

Audited and found correct,
[illegible] WAMI, Auditor, 6—1—'36

LAKSHMINARAYANAN,
Manager, 5—12—'35.

## துரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்படும் புத்தகங்கள்.

### II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | | |
|---|---|---|---|
| ஐந்திணையைம்பது உரையுடன் ... ... ... | 0 | 4 | 0 |
| களுநால் (5) இனியநாற்பது (உரையுடன்) ... | 0 | 3 | 0 |
| வளையாபதிச்செய்யுட்கள் ... ... ... | | | |
| புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| நேமிநாதம் (உரையுடன்) ... ... ... | 0 | 12 | 0 |
| திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) .. | 0 | 8 | 0 |
| அநுமானவிளக்கம் ... ... ... | 0 | 10 | 0 |
| அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம் ... ... | | | |
| பன்னிருபாட்டியல் ... ... ... | | | |
| நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 3 | 0 |
| திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | 0 | 3 | 0 |
| திருவாரூருலா ... ... ... | 0 | 8 | 0 |
| சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| இயற்கைப்பொருட்பாடம்... ... ... | 0 | 4 | 0 |
| தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| நரிவிருத்தம் ... ... ... ... | 0 | 2 | 0 |
| சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| *திருக்கலம்பகம் (ஷை) ... ... | | | |
| *விக்கிரமசோழனுலா ... ... ... | | | |
| குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... ... | 0 | 2 | 0 |
| திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| மதுரைத்திருப்பணிமாலை... ... ... | 0 | 8 | 0 |
| *சந்திராலோகம் ... ... ... | | | |
| *சோழவம்சசரித்திரச்சுருக்கம் ... ... | | | |
| ஞானமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| பாண்டியம் ... ... ... ... | 0 | 4 | 0 |
| மகீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| வேளிர்வரலாறு ... ... ... | 0 | 8 | 0 |
| அகப்பொருள்விளக்கம் ... ... ... | 1 | 4 | 0 |
| *திருமந்திரநூறுபாட்டுக்குரை ... ... | | | |
| உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| *பழமொழி மூலமும் பழையஉரையும்(முதல் 100 செய்) | 1 | 0 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 49. | கடைவள்ளலார்காலம் ... ... ... | 0 | 6 | 0 |
| 50. | தமிழரும் ஆந்திரரும் ... ... ... | 0 | 4 | 0 |
| 51. | மதங்கசூளாமணி ... ... ... | 1 | 0 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் ... ... ... | 0 | 6 | 0 |
| | ஷை ஆங்கிலத்தில் ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்க நிகண்டு ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில்அந்தாதி ... ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை ... ... ... | 5 | 0 | 0 |

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4—8—0. இதுவரை 32 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டு வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.